www.padippakam.com

இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பட்டது.

# தொழிலாளர் பாதை

விலை 1/50

● மாதமிரு இதழ் இதழ் 396 ● 1990 ஜூலை 22 ஞாயிற்றுக்கிழமை

**லியோன் ட்ரொட்ஸ்கி**
**படுகொலையின் 50 ஆண்டு நிறைவு**



**ஆகஸ்ட் 2**
**ஞாயிறு**

★ புத்தக கண்காட்சி
காலை 10மணி

• கூட்டம் மாலை 3மணி
★ ட்ரொட்ஸ்கி வாழ்க்கை
செய்திப் படம்

பொதுஜன நூல் நிலையம்
கொழும்பு — 7.

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்**

# இனவாத யுத்தத்தின் மூலம் சர்வாதிகாரத் திட்டங்கள் இறுக்கமடைகிறது!

**வட-கிழ் மாகாணங்களில் யூ. என். பி. அரசாங்கம் நடாத்தி வரும் இனவாத யுத்தம் இரண்டாம் மாதத்தினை நெருங்கிக் கொண்டுள்ளது. ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் இரத்தத்தினை உறிஞ்சிக் குடிக்கவும், இலங்கை தொழிலாளர் ஒடுக்கப்படும் ஏழைகளினை பயங்கரமாக நசுக்கித் தள்ளவும் யூ. என். பி. அரசாங்கம் யுத்தத்தினை பயன்படுத்திக் கொண்டுள்ளது.**

இந்த மிலேச்ச இனவாத யுத்தம், முதலாளி வர்க்கம் தனது வர்க்க ஆட்சியை சிங்களம் — தமிழ் பேசும் முழுத் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களிடமிருந்து காக்கும் பொருட்டு நடாத்தும் வர்க்க யுத்தத்தின் ஒரு பாகம். இந்த புறநிலை உண்மையை பூசிமெழுகவும், சிங்கள முதலாளிகள் 'தாய் நாடு காக்கும்' பெயரில் பரப்பும் நச்சுப் புகையை தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் கண்களில் அள்ளி அறைவதன் மூலம் அவர்களை வர்க்க யுத்தித்திற்கு பலிகடாக் களாக்க இ.தொ.கா,சமசமாஜ கம்யூனிச, நவசமசமாஜ தலைவர்கள் நடாத்தும் அடிமை சேவகங்களை அடியோடு நிராகரிக்கும் படியும் யுத்தத்துக்கு எதிராகவும் தொழிலாள-ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளை காக்கவும் புரட்சிகர வேலைத் திட்டத்தின் அடிப்படையில் வர்க்கப் போராட்ட பாதையில் இறங்குமாறு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக்கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது.

யுத்தத்தின் கடந்த ஒரு சில 'ாரங்கள் தமிழ் ஒடுக்கப்படும் க்களின் பிரமாண்டமான திர்ப்பினலும் சிங்கள முதாளி வர்க்கத்தின் பலவீனத் னூலும் இலங்கையில் தொழிாள ஒடுக்கப்படும் மக்கள் ந்த முதலாளித்துவ யுத்தத் க்கு எதிராக அணிதிரட்டு தற்கு வாய்ப்பான நிலைமை ளை வெளிக்காட்டியது. அத் நாடு அந்த நிலைமைகள் ாச்சி கண்டும் வருகின்றன. ந்த யுத்தத்தினை தொடுக்க ம் தொழிலாள, ஒடுக்கப் டும் மக்களை நசுக்கவும் முதளி வர்க்கம் துரோகத் லைமைகளிலேயே தங்கியுள் து.

1) யூ. என். பி. அரசாங்கம் ாழ்ப்பாணக் குடாநாட்டி ாக் கைப்பற்றும் பேரில் தமிழ் க்கள் மேல் என்றுமில்லாத ன்பங்களையும் துயரங்களை ம் திணிக்கத் தயாராகிக் காண்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மட்டும் இதுவரையும் 2000க்கும் அதிகமான மக்கள் கொல்லப் பட்டும் பல்லாயிரக்கணக் கானோர் காயமடைந்தும் (வட-கிழக்கில்) 6 இலட்சத்துக்கு அதிகமானோர் அகதிகளாகியும் உள்ளனர். அத்தோடு 30000க் கும் அதிகமான மக்கள் இலங்கை கடற்படையின் பீரங்கிகளுக்கு தப்பி, அகதிகளாக இந்தியா சென்றுள்ளனர்.

ஜூன் 12ம் திகதி கிழக்கு மாகாணத்தினைக் கைப்பற்றும் யுத்தத்தில் இலங்கை ஆயுதப் படைகள் இறங்கின. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளதும் பொதுமக் களதும் பலத்த எதிர்ப்பின் மத்தியில் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களின் துணையுடன் யூ. என் பி. அரசாங்கத்தின் படைகள் அம்பாறை, கல்முனை, ஏறாவூர், களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு, திருகோணமலை மூதூர், பொத்துவில் முதலான நகரங்களை சென்றடைந்தன.

## குண்டுவீச்சு

இதே பாணியிலான காட்டுமிராண்டி தாக்குதல்கள் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் விடுதலைப் புலிகளால் முற்றுகையிடப்பட்டுள்ள யாழ்ப்பாணம் கோட்டை, பலாலி விமானத்தளம் கைப்பற்றப்படுவதை தவிர்க்கும் பொருட்டு விமானப்படை குண்டு வீச்சு விமானங்களின் தாக்குதல்கள் ஆரம்பமாகி ஏறக்கனவே ஒரு மாதம் கழிந்து விட்டது.

யுத்தம் சம்பந்தமாக தமிழ் மக்களின் ஆக்ரோஷமான எதிர்ப்பு என்றும் இல்லாத விதத்தில் உக்கிரம் கண்டுள்ளதால் யத்தத்துக்கு ஆதரவு தரும் தமிழர் விடுதலை கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எப். தலைமைகள் தலைதப்பும் பொருட்டு, அப்பாவி குடி மக்களை கொலைசெய்ய வேண்டாம் என ஜனாதிபதி பிரேமதாசவிடம் முறைப்பாடு செய்யத் தொடங்கி உள்ளனர்: புளொட்' இயக்கத் தலைவர்கள் பிரேமதாசவைச் சந்தித்து தமது அமைப்பின் உறுப்பினர்கள் பலர் இராணுவத்தினால் கொலை செய்யப்பட்டுள்ளதாக முறையிட்டுள்ளனர் யூலை 19ல் பாராளுமன்றத்தில் பேசிய ஈ. பீ. ஆர். எல். எப். அங்கத்தவர் குகனேஷ்வரன், மட்டக்களப்பு லேக் வீதியில் கொன்று டயர் நெருப்பில் சுட்டுப் பொசுக்கப்பட்ட 27 இளைஞர்களின் சடலங்கள் (யூன் 17ம் திகதி) காணப்பட்டதாகவும் கோட்டை கல்லாறு பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 14 அங்கத்தினர்கள் சுட்டுப் பொசுக்கப்பட்ட நிலையில் (யூன் 21)காணப்பட்டதாயும் பேசியுள்ளனர். கல்முனை பொலிஸ் நிலையத்துக்குச் சமீபமாக பெண்கள் உட்பட கைது செய்யப்பட்ட 34 பேரின் சடலங்கள் சுட்டுப் பொசுங்கிய நிலையில் கிடந்ததை கண்டதாக கண்கண்ட காட்சிகள் தெரிவித்துள்ளனர்.

இவை வட-கிழக்கைக் கைப்பற்றும் பொருட்டு பிரேமதாச அரசாங்கம் அனைத்து முதலாளிகளதும் துரோகத்தொழிலாளர் தலைவர்களதும் ஒத்துழைப்புடன் கட்டவிழ்த்துள்ள கீழ்த்தரமான யுத்தத்தின் ஒரு சில சம்பவங்கள் மட்டுமே.

## முதலைக் கண்ணீர்

தமிழ் மக்களை நசுக்க 1987 ஜூலையில் இந்திய இராணுவத்தினை அனுப்பிய இந்திய ஆளும் வர்க்கம், தமிழ் பொது மக்கள் கொல்லப்படுவதை யிட்டு முதலைக் கண்ணீர் வடிப்பதோடு, விடுதலைப் புலிகளை நசுக்குவதாக கூறி தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தினை நசுக்கவும் இலங்கை முதலாளி வர்க்க ஆட்சியை காக்கவும் பிரேமதாச அரசாங்கத்தின் இரத்தம் சிந்தும் யுத்தத்துக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்துள்ளது. விடுதலைப் போராட்டத்தினை நசுக்க பிரேமதாச நடாத்தும் இராணுவ நடவடிக்கைகளின்தொடர்பாக இந்தியத் துணைக்கண்டத் தொழிலாளர்களிடையே வளரும் எதிர்ப்பினை வளைத்துப் பிடித்து தமது கைக்குள் கொணரும் பொருட்டு தமிழ் நாடு காங்கிரஸ் முதலாளிகள் ஊர்வலம் நடாத்தியதோடு கருணாநிதி அரசாங்கம் (ஜூலை 20) தமிழ் நாட்டில் காலைமுதல் மாலைவரை 'பந்த்' நடாத்தியது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்டாலினிஸ்டு தலைவர்கள் முதலாளிகளின் வாலில் தொங்கியுள்ளனர், சோவியத் ஸ்டாலினிச கொர்பச்சேவ் அரசாங்கம்பிரேமதாசஅரசாங்கத்துக்கு யுத்தத்தின் ஆரம்ப நாட்களில் தனது ஆதரவை வெளிப் படுத்தியது.

ஏகாதிபத்திய வாதிகளாலும் பிராந்திய மூதலாளிகளாலும் இயக்கப்படும் பிரேமதாச அரசாங்கம் இழுபட்டுச் செல்லும் யுத்தத்தில் இராணுவத்தினைப் பலப்படுத்தும் பொருட்டு 500 கோடி ரூபா உபமானிய மதிப்பீட்டினை நிறைவேற்றிக் கொண்டு, ஆயுத சந்தைகளில் கொள்வனவு சவாரியில் குதித்துள்ளது.

யுத்தத்தின் பொருட்டு கட்டவிழ்க்கப்பட்டுள்ள காட்டுமிராண்டித்தனங்களும்அரசாங்கப் படைகளுக்கு கிடைத்த வெற்றிகள்பற்றிய பிரச்சாரங்களும் என்னவாக இருந்தபோதிலும் முகாம், கள் அமைத்துக் கொண்ட நகரங்களுக்கு அப்பால் இராணுவம் செல்ல முடியாதுள்ளது. தமிழ்மக்களை ஒடுக்கப்பட்ட இனமாக வைத்துக்கொள்ளும் முதலாளி வர்க்கத்தின் தேவையையும் பலவீனத்தினையும் வெளிக்காட்டும் விதத்தில் அரசின் யுத்தத்தினை வழிநடத்தும் அதிகாரி டென்சில் கொப்பேகடுவ பிரான்சிய செய்தி சேவைக்கு (ஏ. எப். பி) பின்வருமாறு குறிப்பிட்டார்.

"நாம் மிகவும் படிப்படியாகவே முன்னேறுகின்றோம். ... எல். ரீ. ரீ. ஈ. பிரச்சாரத்தினை முடிவுக்கு கொணர ஒரு அரசியல் தீர்வு அவசியம். ஆனால் கிளர்ச்சிக்காரர்கள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட முன்னர் இராணுவத்தின் கை மேலோங்கவேண்டும்"
(டெயிலி நியூஸ் — ஜூலை 14)

இந்த அறிக்கையின் இரண்டு நாட்களின் பின்னர் வடக்கில் கொக்காவில் இராணுவமுகாம் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளால் நாசமாக்கப் பட்டதைத் தொடர்ந்து அதிர்ச்சிக்குள்ளான அரசாங்க மும் முதலாளித்துவப் பத்திரிகை பைத்தியங்களும் யுத்தத்தில் "வெற்றி தோல்விகள் இரண்டும்" உண்டு எனவும் நீண்டு செல்லும் யுத்தத்துக்குத் தாம் முகம் கொடுத்துள்ளதாகவும் தெரிவித்தன. அரசாங்க அறிக்கையின்படி யுத்தத்தில் 533 படையாட்களும் பொலிசாரும் இருந்துள்ளதாயும் 603 பேர் காயமடைந்துள்ளதாயும் 654 பேர் காணாமற் போயுள்ளதாயும் தெரிய வந்துள்ளது.

2. யுத்தத்தின் ஆரம்பத்துடன் தோட்டத் தொழிலாளர்கள் மேல் இனவாத தாக்குதல்களை நடாத்துவதில் அரசபடைகளும், இனவாத ஆத்திரமூட்டல்காரர்களும் இறங்கினர். இதனல் 6 தொழிலாளர்கள் கொல்லப்பட்டதோடு நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். மத்துகம பகுதியில் இனவாதிகள் பல தோட்டங்களில் நுழைந்து தொழிலாளர்களை தாக்கினர். இந்தப் பயங்கரங்களுக்கு எதிராக பதுளைப் பிராந்தியத்தில் 50000 தொழிலாளர்களும், இராகலைப் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்; தோட்டத்துறை பூராவும் தொழிலாளர்களிடையே எதிர்ப்பு வளர்ச்சி கண்டு வருகின்றது. வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்கள் இ. தொ,கா சமசமாஜ, கம்யூனிச, நவசம சமாஜ தலைவர்களால்வேலைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

ஒடுக்குமுறை பயங்கரங்கள் உக்கிரம் கண்டது மட்டுமன்றி விலைவாசிகள் பெருமளவு அதிகரிக்கப்பட்டு வாழ்க்கைத் தரம் உறிஞ் ப்பட்டு வருகின்றது: தொழில் வெட்டும், உதவி மானிய ஒழிப்பும் உலக வங்கி கட்டளையின்படி புதிய வேகத்தில் அமுல் செய்யப்பட்டு வருகின்றது: ஜூன் மாதகொழும்பு வாழ்க்கைச் செலவுப் புள்ளி 1060,8 ஆக உயர்ந்துள்ளது. ஜூலை முதல் வாரத்தில் ஒட்டுப் பலகைக் கூட்டுத்தாபனத்தினை இழுத்து மூட அரசாங்கம்ஆரம்பித்ததைத் தொடர்ந்து 2000 தொழிலாளர்கள் கதவடைப்புச் செய்யப்பட்டனர். யுத்தத்தின் ஆரம்பத்தில் தொழிலாளர்களதும், பொது மக்களதும் எதிர்ப்பினால் ஒத்திவைக்கப் பட்ட இ. போ. ச. தனியார் மயமாக்கமும் 52,000 தொழிலாளர்களை நீக்கும் திட்டங்களும் மீண்டும் அமுலுக்கு வந்துள்ளன.

இதேவேளையில் 'தாய்நாடு காக்கும்' கொடிகளை தமது

20 ம் பக்கம் பார்க்க)

**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை அகற்று!**

படிப்பகம்

www.padippakam.com



## கொழும்பு தொழிற்சங்க மகாநாட்டில் தீர்மானம்:

# இனவாத யுத்தத்துக்கு ஆதரவாக ஒரு சதமோ, ஆளோ வழங்காதே!

யூ. என். பி. அரசாங்கம் வட—கீழ் மாகாண தமிழ் தேசிய இனத்தினரின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு எதிராகத் தொடுத்துள்ள இனவாத யுத்தத்துக்கு ஆதரவாக ஆரம்பித்துள்ள பாதுகாப்பு நிதிக்கு ஒரு சதமோ அல்லது இராணுவத்தைப் பலப்படுத்த ஒரு ஆளோ வழங்கலாகாது என்ற பிரேரணை மத்திய வங்கி ஊழியர் சங்கம் மற்றும் தொழிற்சங்கங்களின் ஆதரவுடன் நடாத்திய பொதுக் கூட்டத்தில் நிறைவேறியது.

அரசாங்க லிகிதர் சேவைச் சங்க மண்டபத்தில் ஜூன் 29ம் திகதி நடைபெற்ற இக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறிய இப்பிரேரணை கூறுவதாவது: ''வட—கீழ் மாகாண தமிழ் ஒடுக்கப்படும் தேசிய இனத்துக்கு எதிராக யூ. என்: பி. அரசாங்கம் தொடுத்துள்ள யுத்தத்துக்கு எதிராக கிளர்ந்தெழும்படி இக்கூட்டம் தொழிலாளர் இயக்கத்தினை வேண்டுகின்றது. கடந்த மாதங்களில் ஜே. வி. பி.யை ஒடுக்குவதாக கூறிக் கொண்டு கிராமப்புற ஏழை இளைஞர்களை கொலை செய்யும் யுத்தத்தில் ஈடுபட்டு வந்த அரசாங்கம் இன்று வட—கீழ் மாகாண யுத்தத்தினை ஆரம்பித்துள்ளது. சிங்கள முதலாளி வர்க்கத்தின் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான தமிழ் மக்களின் கிளர்ச்சியை நசுக்குவதே யுத்தத்தின் இலக்கு. இந்த யுத்தம் தொழிலாள வர்க்கத்தினை தோற்கடித்து இராணுவ சர்வாதிகாரத்தினை திணிக்க சிங்கள முதலாளி வர்க்கம் நடாத்தி வரும் வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாகும்.

''உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் கட்டளைகளையும், முதலாளி வர்க்கத்தின் நெருக்கடியையும் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் மீது திணித்தும், தொழில், வாழ்க்கைத்தரங்களையும் ஜனநாயக உரிமைகளையும் நசுக்கும் யுத்தத்தில் இன்று ஈடுபட்டுள்ள இந்த அரசாங்கம் நான்கு வட—கீழ் மாகாணங்களை ஒத்த பூரண இராணுவபயங்கரத்தினை கட்டவிழ்த்துத் திட்டமிட்டுள்ளது.

தொழிலாள வர்க்கத்தின் தொழில், வாழ்க்கைத் தரம் மற்றும் உரிமைகளுக்கான வர்க்கப் போராட்டத்தினை இந்த தமிழர் விரோத சிங்கள இனவாதத்தின் மூலம் தடம்புரளச் செய்யும் பிரமாண்டமான இனவாதப் பிரச்சாரத்தினை அரசு ஆரம்பித்துள்ளது. பதுளையில் ஏற்கனவே இரண்டு தோட்டத் தொழிலாளர்களை படுகொலை செய்தும் அநேக தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு எதிரான தாக்குதல்களைக் கட்டவிழ்த்தும், தமிழ் இளைஞர்களைக் கைது செய்தும், இனவாத ஆத்திரமூட்டும் நடவடிக்கைக்குத் தூபமிட்டும் வருகின்றது.

### மூடிமறைப்பு

இவற்றினை இனவாதப் பிரச்சாரங்கள் மூலம் மூடிமறைத்து வட—கீழ் மாகாண தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களது உயிர்களுக்கும், உடமைகளுக்கும் இந்த யுத்தம் பாரிய நாசத்தினை ஏற்கனவே உண்டு பண்ணியுள்ளது. முதலாளி வர்க்கத்தின் இந்த யுத்தத்துக்கு ஆதரவு வழங்கும் சகல துரோகத் தலைவர்களும் தமிழ் ஒடுக்கப்படும் மக்களை மட்டுமன்றி, இலங்கை தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை முதலாளித்துவத்துக்கு காட்டிக் கொடுக்கும் துரோக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

''முதலாளி வர்க்கத்துடன் சலுகைகளுக்காக சமரசம் செய்யும் வேலைத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ் ஒடுக்கப்படும் மக்களை பேராபத்தில் மாட்டியுள்ளது எனவும் இச்சபை கூறிக்கொள்கின்றது. சகல தொழிலாள வர்க்க அமைப்புக்களையும் நாம் வேண்டுவதாவது!

★ தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக இனவாத யுத்தத்தின் பேரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நிதிக்கு ஒரு சதமும் கொடுக்காதே!

★ முதலாளித்துவ யுத்தத்தின் பிரகிரியைப் பலப்படுத்தும் நடவடிக்கையாக இராணுவத்துக்கு பலம் சேர்க்க எவரையும் கொடாதே!

★ வட — கிழக்கில் இருந்து சிங்கள முதலாளி வர்க்க இராணுவத்தை வெளியேற்று! சிங்கள — தமிழ் தொழிலாளர்களின் ஐக்கியத்துக்காகப் போராடு!

★ இனவாத யுத்தத்துக்கு எதிராக பொதுவேலை நிறுத்தத்துக்கு தயார்செய்! முதலாளித்துவ வர்க்க ஆட்சியை தூக்கி வீசி, சோசலிச வேலைத்திட்டத்தினை நடைமுறைக்கிடுகின்றதும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை உத்தரவாதம் செய்கின்றதும், கிராமப்புற ஏழைகளின் பிரச்சினைகளைத் தீர்க்கின்றதுமான இலங்கை — தமிழ்ஈழம் சோசலிச குடியரசிற்காகப் போராடு!''

---

# யூ. என். பி. இனவாத யுத்தப் பயங்கரம் தோட்டங்களுக்கு விஸ்தரிப்பு!

வட — கீழ் மாகாணங்களில் தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான யூ.என்.பி. இனவாத படைகளின் கொலைகார யுத்தம் கட்டவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து மொனராகலை, நுவரஎலிய, மத்துகமை முதலான தோட்டப் பகுதிகளில் ஆயுதப் படையினரதும் கொலைகாரக் கும்பல்களதும் கொலை, தீவைப்பு, கற்பழிப்பு, சித்திரவதைகள் பரந்தளவில் இடம் பெற்றுள்ளன.

மொனராகலை மாவட்டத்தைச் சேர்ந்த புத்தள நகருக்கு அருகேயுள்ள, நாமண்டிய தோட்டத்தில் வசித்த 45 குடும்பங்களைச் சேர்ந்த 197 அப்பாவித் தமிழ் தொழிலாளர்கள் சிங்கள இனவாதக் குண்டர்களால் தாக்கப்பட்டுள்ளனர். ஜூன் 18ம் திகதி இரவு 12 மணியளவில் நுழைந்து தொழிலாளர்களைத் தாக்கிய இக்கும்பல் வீடுகளுக்கு தீமூட்டியது; பெறுமதியான நகைகள் பொருட்கள் சூறையாடப்பட்டதோடு இரண்டு இளம் யுவதிகள் இக்கும்பலால் கற்பழிக்கப்பட்டுமுள்ளனர். இம்மக்கள் மொனராகலை விபுலாநந்த தமிழ் வித்தியாலயத்தில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இதே மாவட்டத்தினைச் சேர்ந்த கும்பக்கனை எட்டு பிளான்டேசனின் பூாராவிலா 100 ஏக்கர் லாயம் 75 ஏக்கர் லயம்களிலும் இத்தகைய காட்டுமிராண்டி தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன. இந்த டிவிசன்களில் வசித்த 47 குடும்பங்களைச் சேர்ந்த 192 தமிழ் தொழிலாளர்கள் ஜூன் 19ம் திகதி நடுச்சாமத்தில் நடந்த தாக்குதலால் காடுகளுக்குள் நுழைய நேரிட்டது. ஆயுதபாணிகளாக வந்த இந்த இனவாத கும்பல்கள் வழக்கம் போல் பணம், நகைகளை எடுத்துக்கொண்டு எஞ்சியவற்றை லயின் காம்பிராக்களின் மத்தியில் குவிந்து தீமூட்டி விட்டுச் சென்றுள்ளனர். இத்தாக்குதல்களால் அகதிகளான இம்மக்கள் போதிய இருப்பிட, மருத்துவ உணவு வசதிகள் இன்றி அவஸ்தைப் பட்டுக் கொண்டுள்ளனர்.

### கடத்தலும் கொலையும்

நுவரெலிய லுணுகலைப் பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் கடத்திச்செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் சடலங்கள் பிபிலை — பதுளை வீதியில் கண்டுபிடிக்கப்பட்டது. ஜீப் வண்டியில் சிவில் உடையில் வந்த கும்பலே இவர்களைக் கடத்திச் சென்று கொலைசெய்துள்ளது. கொலையுண்டவர்களில் ஒருவர் கொரடுகலை யுனிபீல்ட் தோட்டத்தைச் சேர்ந்த சந்தோசம் என்ற இளைஞராவார். மற்றையவர் லுணுகலையை வசிப்பிடமாகக் கொண்ட வி. லோகமூர்த்தி யாவார்.

சயவகமை, சுந்தவரல்லை முதலான தோட்டங்களைச் சேர்ந்த 15 இளைஞர்கள் கைதாகி, பக்டரிக்குக் கொண்டு செல்லப்பட்டு மோசமாகத் தாக்கப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்த காட்டுமிராண்டி இனவாத தாக்குதல்களை எதிர்த்து ஊவாபிராந்தியம் பூராவும் உள்ள சுமார் 50,000 தொழிலாளர்கள் வேலைநிறுத்தத் தயாரிப்புக்களில் ஈடுபட்டனர். இராகலை லிமோஸ்டல்தோட்டத்தொழிலாளர்களை தாக்கிய கும்பல் தோட்ட வீடுகளையும் நாசமாக்கினர். இந்த அட்டூழியங்கள் பற்றி முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து தோட்டத்துக்கு வந்த பொலிசார் செய்தது 6 தொழிலாளர்களை கைது செய்ததே. இந்த கைது செய்தலை எதிர்த்து 1000 தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கியதைத் தொடர்ந்து இவர்களைப் பொலிசார் விடுதலை செய்ய நேரிட்டது.

### வெலிமடை — மத்துகமை

வெலிமடை போகஹகும்புர தோட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4வர் குண்டர் கும்பலால் வெட்டிக் குத்திக் கொல்லப்பட்டுள்ளனர். மத்துகமை சிறிகந்துரை தோட்டத்தில் தொழிலாளர்கள் தாக்கப்பட்டதில் மூவர் கடும் காயமடைந்தனர். அத்தோடு 13 குடும்பங்களைச் சேர்ந்த 59பேர் வீடுவாசல் இன்றி அகதிகளாகத் தள்ளப்பட்டுள்ளனர். அகலவத்தை தோட்டங்களிலும் இத்தகைய தாக்குதல்கள் பரந்தளவில் இடம் பெற்றுள்ளன.

தோட்டங்களில் 'பயங்கரவாதிகள்' ஊடுருவி உள்ளதாக யூ. என். பி. அரசாங்கமும், முதலாளித்துவப் பத்திரிகைகளும் பரந்தளவிலான பிரச்சாரத்தினை கொண்டு நடாத்தி வரும் ஒரு கட்டத்திலேயே இத்தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

சமசமாஜ—கம்யூனிச — நவசமசமாஜ தலைவர்களும் அரசாங்கத்தின் உள்ளேயும் வெளியேயும் இ. தொ. கா. தலைவர்களும் இனவாத யுத்தத்துக்கு வழங்கி வரும் பூரண ஆதரவின் பக்கபலத்துடனேயே இந்த பயங்கரம் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகக் கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. இவர்கள் யுத்தப் பிரகடனம், பாதுகாப்பு நிதி சேர்ப்புக்கு மட்டுமன்றி வட—கீழ் மாகாணங்களில் சிங்கள இனவாத இராணுவம் நடாத்தும் கொலைகார யுத்தத்தினை அனைத்துலக தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களின் கண்களில் இருந்து மறைக்கும் 'சமாதான தூதுக் குழுவின்' விஜயங்களுக்கும் ஆதரவு வழங்கியுள்ளனர்.

தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் அரசின் இப்பயங்கரங்கள் கொழுந்துவிட்டு எரியும் நிலையிலும், இ. தொ. கா. வின் இரண்டு அமைச்சர்கள் தமிழ் நாட்டில் இனவாத யுத்த யந்திரத்தின் பிரச்சாரகர் வேலையில் ஈடுபட்டுள்ளனர். வெளிவெளியாக 'சார்க்' நாடுகளுக்குச் செல்லும் பாராளுமன்ற தூதுக் குழுவில் பங்கெடுப்பது தொழிலாளர்கள் மத்தியில் பெரும் சீற்றத்தை ஏற்படுத்தும் என்பதை அறிந்தே இந்த துரோகத் தலைவர்கள் இந்த கடைகெட்ட வேலையில் முன்கூட்டியே ஈடுபட்டனர்.

1 இலட்சத்து 50 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்களை நாடுகடத்துவது பற்றிய திட்டம் வெளியாகியதும் தொழிலாளர்களிடையே ஏற்பட்ட எதிர்ப்பு, இ.தொ.கா. தலைவர்கள் தொடர்ந்தும் முதலாளித்துவ யூ.என்.பி. அரசாங்கத்தின் இராணுவ — பாசிச அரசாங்கத் தயாரிப்புக்களுக்கு எதிரான போராட்டங்களுக்கு கால்கட்டு போடுவதில் வெற்றி பெறப்போவதில்லை என்பதைச் சுட்டிக் காட்டியது. சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ துரோகிகளின் நிலையும் இதுவே. எனவேதான் அவர்கள் 'பாசிச விடுதலைப் புலிகள்' என்ற பம்மாத்தின் கீழ் தமிழ் தேசிய இனத்துக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும எதிராக இலங்கை இனவாத முதலாளி வர்க்கத்தினால் தொடுக்கப்பட்டுள்ள யுத்தத்தினை நியாயப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர். இதன் மூலம் 1940களில் இருந்து இலங்கை முதலாளி வர்க்கத்தின் பிறப்புரிமையான இனவெறியையும், இரத்தக் களரியையும் இவர்கள் பூசி மெழுகும் கையாலாகாத்தனமான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கு — கிழக்கில் மட்டுமன்றி தோட்டங்களுக்கும் இந்த யூ. என். பி. பயங்கர ஆட்சி விஸ்தரிக்கப்பட்டுள்ள நிலையில் அநுராத புரத்தில் பேசிய இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான் ''இந்த பயங்கரம் இன்று வடக்கு — கிழக்குடன் கட்டுப்பட்டுள்ளது இது படிப்படியாக குறைந்து வருவதைக் காண மனதுக்கு ஆறுதலாக உள்ளது'' (ஐலண்ட் 19—7—90) என உண்மை நிலையை அப்படியே பூசிமெழுகும் பித்போக்குத் தொனியில் பேசியுள்ளார்.

www.padippakam.com

### சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி 28வது காங்கிரஸ்

# நெருக்கடி காங்கிரஸாக முடிவடைந்துள்ளது

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 28வது காங்கிரஸ் ஸ்டாலினிசத்தின் வரலாற்று நெருக்கடியைப் பிரதிபலிக்கும் காங்கிரஸாக நடந்து முடிந்திருக்கின்றது. 1917 அக்டோபர் புரட்சியின் சகல வரலாற்றுத் தேட்டங்களையும் சிதறடித்து முதலாளித்துவத்தினை அங்கு மீண்டும் புனருத்தாரணம்செய்வது சம்பந்தமாக ஸ்டாலினிசக் கும்பல்களிடையே நிலவி வந்த முரண்பாடுகள் காங்கிரசில் வெடித்துச் சிதறும் மட்டத்தினை அடைந்தது.

1987ல் கிரெம்ளின் அதிகார பீடத்தின் 2ம் புள்ளியான யெகோர் லிகிசேவுடன் மத்திய குழு கூட்டமொன்றில் மோதியதை தொடர்ந்து அரசியல் குழுவில் இருந்து விலக்கப்பட்ட பொறிஸ் ஜெல்சின் இந்த 28வது காங்கிரசில் கட்சியில் இருந்து வெளியேறியுள்ளார். சோவியத் அரசின் மிகப் பெரிய குடியரசான ரஷ்ய சம்மேளனத்தின் தலைவரான ஜெல்ட்சின் சோவியத்தினுள் முதலாளித்துவத்தினை புனருத்தாரணம் செய்ய வேண்டும் என வெளி வெளியாகப் பேசி வந்தவர். 1987ல் இவர் அமெரிக்காவுக்கு விஜயம் செய்தபோது திட்டமிட்ட பொருளாதாரத்தின் தோல்வி சோசலிசத்தின் தோல்வியையும், முதலாளித்துவத்தின் மேன்மையையும் சுட்டிக்காட்டுகின்றது என்ற கம்யூனிச எதிர்ப்பு பிரச்சாரத்துக்கு முண்டு கொடுத்தவர்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 'கடும் போக்காளர்கள்' என வருணிக்கப்படும் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் அலக்சாந்தர் புஸ்காவின் கன்னை. "பொருளாதாரத் திட்டம், சித்தாந்தம ஆகியவை சம்பந்தப்பட்ட மட்டில் மேற்கத்திய மாதிரியை பின்பற்றச் செய்யும் இடதுசாரிகளுடனும் அரசாங்கத்துடனும் நாங்கள் மாறுபடுகின்றோம்; சோசலிச கோஷங்களின் பின்னணியில் இவர்கள் பூர்ஷ்வா லிபரல் பொருளாதாரத் திட்டத்தைக் கொண்டு வர முயல்கிறார்கள்" என்றுள்ளது.

## 'கடும் போக்காளர்கள்'

கொர்பச்சேவின் 'கிளாஸ் நொஸ்ட்', 'ப்ரெஸ்ரோய்கா' வேலைத்திட்டங்களுக்குப்பதிராக சோவியத் யூனியனில் இலட்சோப இலட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டமையும் கிழக்கு ஐரோப்பிய ஸ்டாலினிச ஆட்சிகளின் வீழ்ச்சியும் கம்யூனிஸ்ட் கட்சியின் சகல ஸ்டாலினிசக் கன்னைகளையும் நெருக்கடிக்குள்ளாக்கி உள்ளது. புஸ்காவின் கன்னையின் இந்த 'அரசாங்கத்துடன் மாறுபடுவது' பற்றிய பேச்சு சமீபத்தில் சுரங்கத் தொழிலாளர்களை முன்னணியில் கொண்டு சோவியத்யூனியனின் முக்கிய கைத்தொழில் நிலையங்களில் ஏற்பட்ட வேலைநிறுத்தங்கள் இந்த எதிர்ப்புரட்சிக் 'கடும் போக்காளர்களை' 'மேற்கத்தைய மாதிரிக்கு' (முதலாளித்துவத்தின்') பின்பற்றுவதை எதிர்ப்பவர்களாகக் காட்டிக் கொள்ளச் செய்துள்ளது.

கொர்பச்சேவ், லிகாசேவுடனான ஜெல்சினின் முரண்பாடு உண்மையில் மூவரும் உடன்படக் கூடிய விதத்தில் சோவியத் யூனியனில் முதலாளித்துவத்தினை புனருத்தாரணம் செய்வது எப்படி என்பது தொடர்பாகவே ஏற்பட்டது.

இந்த 28வது மகாநாட்டின் ஒன்பதாவது நாளன்று விளாடிமீர் ஷாஸ்டோவஸ்தி தலைமையிலான தாராளவாதிகள் தாம் சுயாதீனமான ஒரு அரசியல் கட்சியொன்றினை அமைக்கப் போவதாகக் கூறி கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து வெளியேறினர். 'டெமோகிரடிக் பிளட்போம்' என தங்களை அழைத்துக் கொள்ளும் இந்த முதலாளித்துவ புனருத்தாரணக் கோஷ்டி, காங்கிரஸில், கலந்து கொண்ட 4700 பேராளர்களில் சுமார் 100 பேரின் ஆதரவை மட்டுமே இவர்களுக்கு இருப்பதாகக் கூறிக் கொள்ளப்பட்டது.

கடந்த மே 31 — ஜூன் 3ம் திகதி இடம் பெற்ற புஷ் — கொர்பச்சேவ் உச்சி மகாநாடு ஸ்டாலினிசத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும்இடையேயான எதிர்ப்புரட்சிக் கூட்டினை சுட்டிக்காட்டியது, இவர்கள் இருவரும் தொழிலாள வர்க்கத்துக்கு எதிரான உலகளாவிய சதியில் கூட்டுப்பங்காளிகளாக வெளிப்பட்டுள்ளனர். சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் முதலாளித்துவத்தினை மீண்டும் புனருத்தாரணம் செய்வது எப்படி என்ற தலைப்பிலான இவர்களது பேச்சுவார்த்தைகள்பின்னர் முதலாளித்துவ ஆட்சிக்குட்பட்ட நாடுகளின் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களை சிரச்சேதம் செய்வது எப்படி? என்பது வரை விஸ்தரிக்கப்பட்டது.

28வது காங்கிரசில் பொதுச் செயலாளராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்தும் காங்கிரஸ் முடியுற்ற ஒரு சில தினங்களுள் ஜேர்மன் ஜனாதிபதி ஹெல்மட் ஹெல் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்துள்ளார் அத்தோடு 'நேட்டோ' தலைமைக் காரியாலயத்துக்கு பேச்சுவார்த்தைக்கு வரும்படி விடுக்கப்பட்ட அழைப்பினை கொர்பச்சேவ் ஏற்றுக் கொண்டுள்ளார்.

## ஐரோப்பியசமூகம்

ஜூன் கடைப்பகுதியில் டப்ளினில் நடைபெற்ற ஐரோப்பிய சமூகத்தின் மகாநாட்டில் ஐரோப்பிய முதலாளித்துவச் சக்திகள் 'பிரான்சிய, மேற்கு ஜெர்மன் ஏகாதிபத்திய அதிபர்களான மிட்ரண்டினாலும், ஹோலினாலும் கூட்டாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு பிரேரணையை கலந்துரையாடினர். இப்பிரேரணை சோவியத் யூனியனுக்கு 15 மில்லியன் டாலர்களை ஐரோப்பிய சமூக 'உதவி' யாக வழங்கவேண்டும் எனக் கோரியது. இதன் நோக்கம் ஐரோப்பிய ஆதிக்கம் மிக்க பொதுச் சந்தையை' அத்திலாந்திக் பிரதேசத்தில் இருந்து சோவியத் ஆசியர் வரை விஸ்தரிப்பதே.

ஹோல் ஒரு கடிதம் ஒன்றில் கொர்பச்சேவ் சோவியத் யூனியனில் சீர்திருத்தங்களை ஆதரிக்க ஏகாதிபத்தியவாதிகள் உதவி வழங்க வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டுள்ளார். எனக் குறிப்பிட்டுள்ளார்.

"சோவியத் பொருளாதாரம் பாரதூரமான கஷ்டமான கட்டத்தினை எதிர்நோக்கிக் கொண்டுள்ளது. இதன் பெறு

19 ம் பக்கம் பார்க்க)

# காஷ்மீரில் யுத்த முஸ்தீபுகளில் சிங் - பூட்டோ ஆட்சிகள்

பாகிஸ்தானுடன் யுத்தத்தினை ஆரம்பிக்கத் தாம் எதுவித தயக்கமும் காட்டப் போவதில்லை என்ற தொனியில் இந்திய வலது சாரி தேசிய முன்னணி அரசாங்கத்தின் பிரதமர் வி. பி. சிங் சமீபத்தில் அலகபாத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

சமீபத்தில் முன்னணி காஷ்மீர் பிரிவினைவாதி ஒருவர் இந்திய இராணுவத்தினால் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்திய இராணுவ முகாம்கள் மீது இடம் பெற்ற நெருக்கட் தாக்குதலில் 6 இந்தியப் படையாட்கள் கொல்லப் பட்டனர்.

இவ்வாண்டின் தொடக்கத்தில் இருந்து இடம்பெற்ற பிரிவினைக் கிளர்ச்சியில் இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட காஷ்மீரில் சுமார் 700 மக்கள் கொல்லப்பட்டனர். பிரிவினைவாத தலைவரின் இக்கொலையைத் தொடர்ந்து ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்கும் பொருட்டு வி பி சிங் அரசாங்கம், ஸ்ரீநகரில் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்ததோடு, ஊரடங்குச் சட்டத்தினை மீறுவோரை கண்ட இடத்தில் சுட்டுத்தள்ளும்படியும் உத்தரவு பிறப்பித்தது.

முஸ்லீம் அடிப்படைவாதிகளைக் கொண்ட கெரில்லா குழுவான ஹெஸ்பி – முபாகுதீன் இயக்க கொமாண்டரான மொஹமட் அப்துல்லா பங்தூவின் கொலையைத் தொடர்ந்து மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் இடம்பெறும் என அஞ்சிய டெல்லி அரசாங்கம் ஒடுக்கு முறை நடவடிக்கைகளை பன்மடங்கு அதிகரித்தது. இக்கெரில்லா இயக்கம், காஷ்மீரின் சகலபகுதிகளும் பாக்கிஸ்தானுடன் இணைக்கப்படவேண்டும் எனக் கோரிவருகின்றது.

ஹெஸ்பி இயக்கத் தலைவரின் இக்கொலை, ஒரு மாத காலத்துள் இடம் பெற்ற காஷ்மீர் பிரிவினைவாதிகள் தலைவரின் இரண்டாவது கொலையாகும். மே மாத இறுதியில் காஷ்மீரில் முன்னணி முஸ்லீம் சமயத் தலைவரான எம். எம். பாரூக் சுட்டுக் கொல்லப்பட்டார் இவரது மரண ஊர்வலத்தில் கலந்து கொண்ட 100,000க்கும் அதிகமான மக்கள் மீது இந்திய பரா இராணுவ பொலிசார் நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 100க்கும் 300க்கும் இடைப்பட்டோர் கொல்லப் பட்டனர்

இந்திய, பாகிஸ்தானிய அரசாங்கங்கள் காஷ்மீர் சம்பந்தமாக ஒரு புதிய யுத்தம் ஏற்படுவதைத் தடுக்கும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது பற்றி அறிவித்ததைத் தொடர்ந்தே காஷ்மீரில் இக்கலவரங்கள் மோசமடைந்தன. பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாக டெல்லியிலும், இஸ்லமாபாத்திலும் ஒரு பொது இணக்கம் காணப்பட்டபோதிலும் அதற்கான திகதியோ அல்லது இடமோ இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

காஷ்மீரின் இன்றையநெருக்கடி, 1947 – 48ம் காலப் பகுதியில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பணிப்பின் கீழ் இந்தியத் துணைக்கண்டம் பிரிவினை செய்யப்பட்டதில் இருந்து இடம்பெற்றுவரும் ஒரு மோசமான தகராறின் தொடர்ச்சியாகும். அன்றும் அதைத் தொடர்ந்து 1965லும் இத்தகராறு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான யுத்தமாக வெடித்தது. மூன்றுவது யுத்தம் 1971ல் கிழக்குவங்காலத்தின் தலைவிதி சம்பந்தமாக வெடித்தது. இந்த யுத்தம் ஒரு உடன்பாட்டில் முடிவடைந்ததோடு அது காஷ்மீர் எல்லைக் கோடுகளை மீள வரையும் உடன்பாட்டினையும் உள்ளடக்கிக் கொண்டது. இந்தியாவில் முஸ்லீம் பெரும்பான்மையைக் கொண்ட ஒரே அரசு காஷ்மீர்தான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

காஷ்மீர் சம்பந்தமாக மற்றுமோர் யுத்தத்துக்கான சாத்தியங்கள் இரண்டு பிற்போக்கு அரசாங்கங்களதும்சூழ்ச்சிகளாலும், அறிக்கைகளாலும் உக்கிரம் கண்டு பரந்ததோடு, வீ. பி. சிங்கின் அலகபாத் பேச்சு அதற்கான தயாரிப்புக்களைச் சுட்டிக் காட்டுகின்றது. அத்தகைய ஒரு யுத்தம் அணுஆயுதங்களின் பாவனையையும் உளளடக்கிக் கொள்ளும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இந்தியா 1974ல் முதல் தடவையாக ஒரு நியூசிளியர்' சாதனத்தை வெடிக்க வைத்தது பாகிஸ்தான் அத்தகைய பலத்தைக் கொண்டுள்ளதாகப் பேசப்பட்டு வருகின்றது அத்தகைய ஒரு யுத்தம், ஏகாதிபத்தியத்துக்கு, ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக இடம் பெற்ற ஈரான் - ஈராக யுத்தத்தினைக் காட்டிலும் படுபயங்கரமான யுத்த சாதனங்களைப் பரீட்சிக்கும் வாய்ப்பினை வழங்கும் என்பதில் சந்தேகம் இல்லை சோவியத் யூனியன் எல்லையில் கொண்ட ஒரு பிராந்தியத்தில் அதன் பாத்திரம் உலக அரசியலில் குறைந்து கொண்டுள்ள நிலையில் இந்த 'நியூசினியர்' அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது அவ்வளவுக்கு கொர்பச்சேவ் அதிகாரத்துவம் ஏகாதிபத்திய நலன்களுடன் நெருங்கி உறவாடிக் கொண்டுள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்தப் பிராந்தியத்தில் தனது முக்கிய ஏஜன்டாக பாகிஸ்தானுக்கு நீண்டகாலமாக நிதியுதவி வழங்கியும், ஆயுதங்கள் விநியோகம் செய்தும் வந்துள்ளது. பின்னர் அது தனது எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளை அமுல செய்ய இந்திய முதலாளி வர்க்கத்தில் பெரிதும் தங்கியிருந்தது உதாரணமாக இலங்கையில் தமிழர் தாயகத்தில் இந்திய ஆக்கிரமிப்பினைக் குறிப்பிடலாம்.

காஷ்மீர் நெருக்கடி மீண்டும் வெடித்துள்ளமை, இப் பிராந்தியத்தில் ஏற்படுத்தப்பட்ட இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னைய தீர்வுகள் சரிந்து போட்டியுள்ளதைக் காட்டுகின்றது இந்தியத் துணைக்கண்டத்தில் இந்தத் தீர்வானது, தேசிய சுதந்திரப் போராட்டத்தினை பிராந்தியத்தினை சமய, இன அடிப்படையில் கூறுபோட்டு கருச்சிதைவு செய்ததன் மூலம் பாதிக்கப்பட்டது. தேசிய முதலாளி வர்க்கத்துடன் கூட்டுச் சேர்ந்து பிரித்தானிய ஏகாதிபத்தியம இதை சாதித்தது,

40 ஆண்டு கால இந்திய பாகிஸ்தானிய முதலாளி வர்க்கத்தின் ஒடுக்குமுறையானது துணைக்கண்டத்தின் ஒடுக்கப்படும் மக்களுக்கு, நிச தேசிய சமத்துவமும, சுயநிர்ணயமும் பாட்டாளி வர்க்கச் சோசலிசப் புரட்சியின் மூலம் மட்டுமே அடையப்பட முடியும் என்பதை நிரூபித்துள்ளது இதற்கு இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் இலங்கை, தொழிலாளர்களை 1947ம் 48ம் ஆண்டு ஏகாதிபத்திய தீர்வுகளுக்கு எதிரான பெரும் போராட்டத்தில் ஈடுபடுத்துவது அவசியம். இலங்கையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும், இந்தியாவில் சோசலிச லேபர் லீக்குமே — இந்தியத் துணைக்கண்ட ஐக்கிய சோவியத் சோசலிச அரசுகளை அமைக்கப் பாராடி வருகின்றன. சகல ஸ்டாலினிச, சீர்திருத்தவாத ஏஜன்டுகளுக்கும் எதிராக ட்ரொட்ஸ்கிச நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவை கட்டி எழுப்புவது தீர்க்கமானது.

படிப்பகம்

www.padippakam.com

# இனவாத யுத்தத்துக்கும் தமிழீழ விடுதலைப்
# தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை

## ( பு. க. க. அரசியல் குழுவின் அறிக்கை )

இந்தியத் துணைக் கண்டம் பூராவும் உள்ள தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்களுடனும் தலாளித்துவ ஆட்சியின் நெருக்கடியுடனும் இணைந்து ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் திடசங்கற்பம் நிறைந்த எதிர்ப்பினால் மார்ச் கடைப்பகுதியில் தனது ஆக்கிரமிப்புப் படைகளை இலங்கையின் வட-கிழ் மாகாணங்களில் இருந்து அகற்றும் வண்ணம் இந்திய ஆளும் வர்க்கம் நெருக்கப்பட்டது. சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ. தொ. க கட்சிகளதும் மற்றும் மத்தியவாத துரோகிகளதும் தமிழ் குட்டி முதலாளித்துவ தேசியவாதக் குழுக்களதும் ஆதரவுகளுக்கு மத்தியிலும் இந்திய – இலங்கை உடன்படிக்கை அதன் சகல எதிர்ப்புரட்சி இலக்குகளிலும் தோல்வி கண்டது.

1987 ஜுலையில் ஜே. ஆர். ஜயவர்தனா, ராஜீவ் காந்தியினால் கைச்சாத்திடப்பட்ட எதிர்ப்புரட்சி ஒப்பந்தம், தமிழ் தேசிய இனத்தின் தேசிய விடுதலைப் போராட்டத்தினை சிதறடித்தல், தெற்கில் தொழிலாள–ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக இரத்தம் தோய்ந்த ஒடுக்குமுறையை தொடரும் பொருட்டு இனவாத யூ. என். பி. அரசாங்கத்தின் இராணுவத்தினை (வடக்கில் இருந்து) விடுவித்தல் என்ற கூட்டு இலக்குகளைக் கொண்டிருந்தது. அவ்வாறே அது ராஜீவ் காந்தியின் அரசியல் நலன்களை பெருக்கி இப்பிராந்தியத்தல் ஏகாதிபத்தியத்தின் முக்கிய பொலிஸ்காரன் என்ற முறையில், இந்திய முதலாளி வர்க்கத்தன் பொறுப்பினை மீண்டும் உறுதி செய்யவும் முயன்றது.

தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தினைச் சிதறடிப்பதற்குப் பதிலாக இந்தியஇராணுவம் ஓராண்டு பூராவும் கடும் எதிர்ப்புக்கு முகம் கொடுத்து படைகளை விலக்கிக் கொள்வதற்கு முன்னதாக 11 படையாட்களின் மரணத்துக்கும் 3000 அதிகமானோரின் அங்கவீனத்துக்கும் உள்ளாகியது.

இந்திய இராணுவ விலகலுக்கும், ஜே. வி. பி. தலைவர்களின் படுகொலைகளுக்கும் பின்னர் பிரேமதாச ஆட்சியின் 'ஸ்திரப்பாடு' பற்றி பத்திரிகை கைக்கூலிகள் ஓன்று பேசிக் கொண்டாலும், கிராமப்புற இளைஞர்களுக்கு எதிரான மிலேச்ச ஒடுக்குமுறை மூலம் அம்மா காணங்கள்ல் முதலாளித்துவக் கட்சிகள் ஆதரவினை, இழந்து போயுள்ளதோடு தொழிலாளி வர்க்கம் வர்க்கப் போராட்டத்தின் புதிய வெடிப்புக்கு ஆயத்தமாகிக் கொண்டுள்ளது.

காந்தி ஜயவர்தனவும் இருவருமே தமது ஒப்பந்தத்தின் முடிவினைக் கண்டுகொள்ள அரசியல் ரீதியில் நின்று பிடிக்கவில்லை. உண்மையில் இந்த ஒப்பந்தம் தேசிய முதலாளி வர்க்கத்தின் அளவுகடந்த துரோகத்தினை வெளிக்காட்டியது. தேசிய சுயாதீனத்தினை காப்பது சம்பந்தமான இலங்கை முதலாளி வர்க்கத்தின் மோசடி அறிக்கைகளைப் போலவே தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவு வழங்குவது சம்பந்தமான இந்திய முதலாளி வர்க்கத்தின் மோசடிகளும் பொதுமக்களின் முன் நிலையில் அம்பலமாகியுள்ளது.

முதலாவதாக தமிழ் மக்களின் வீரியமமிக்க போராட்டமே இந்திய ஆக்கிரமிப்புப் படைகளை விலக்கிக் கொள்ள நெருக்கியது 1 இலட்சம் இந்தியப் படைகளின் கொடூரமான அநியாயங்களுக்கும் 5 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்களின் கொலைகளுக்கும், ஆயிரக்கணக்கானோரை அகதிகளாக்கியும் கொள்ளைகளுக்கும், கற்பழிப்புக்களுக்கும் மத்தியிலும் ஆக்கிரமிப்பு படைகளுக்கும் எதிரான தமிழ் தேசிய இனத்தின் விடாப்பிடியான எதிர்ப்பு நின்றுவிடவில்லை.

இதற்கு முன்னைய சிங்கள இராணுவத்தினைப் போலவே இந்திய இராணுவமும் தமிழ் தேசிய இனத்தினைக் கொண்டு அதனது தேசிய விடுதலைப் போராட்டத்தினை திசை திருப்புவதில் வெற்றிபெறவில்லை. அதற்குப் பதிலாக ஒடுக்குமுறையில் பிறந்து பெரிதும் ஒடுக்கப்பட்ட இளைஞர் பகுதியினர் விடுதலைப் போராட்டம் பக்கம் மேலும் மேலும் ஈர்க்கப்பட்டனர்.

இராணுவம் வாபஸ் பெறப்பட்டதன் பின்னர் ஆக்கிரமிப்பு இராணுவத்தின் தளபதியான ஜெனரல் கல்கட், புதுடில்லியில் வெளியிட்ட அறிக்கை, இந்திய முதலாளி வர்க்கம் படைகளை வாபஸ் பெற தீர்மானம் செய்தது ஏன் என்பதை தெளிவுபடுத்துகின்றது. அவர் கூறியதாவது: "வியட்னாம் யுத்தத்தில் அமெரிக்கர்கள் முகம் கொடுத்த மரண எண்ணிக்கையோடு ஒப்பிடுமிடத்து எமது எண்ணைக்கை மிகவும் சிறியது. இதனை நாம் தாங்கிக்கொள்ள முடியும்." என்றார். இந்திய அரசாங்கம் தாம் வியட்னாம் போன்ற அழிவுக்கு முகம் கொடுக்க நேரிடுமோ என அஞ்சிக் கொண்டிருந்தனர். இராணுவத்தின் மரண எண்ணிக்கை சகிக்க முடியாத கட்டத்துக்கு உயர்வதற்கு முன்னரே படைகளை விலக்கிக் கொள்ள தீர்மானம் செய்ததற்குக் காரணம் அதுவே. இந் நிலையில் கல்கட் தலைதப்பிக் கொள்ள முயற்சி செய்துள்ளார் அவர் கூறுவதாவது: வியட்னாமில் அமெரிக்கர்கள் செத்த அளவுக்கு எமது ஆட்கள் இறக்கவில்லை' என்பதே.

அத்தோடு இந்த இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பு ஆரம்பம் முதலே இந்தியாவிலும் இலங்கையிலும் தொழிலாள வர்க்கத்தின் கடும் எதிர்ப்புக்கு முகம் கொடுத்தது கடந்த ஆண்டு ஆகஸ்டில் காந்தி ஆட்சி வேலைநிறுத்தங்களுக்கு முகம் கொடுத்ததால் குறித்த காலத்துக்கு முன்னரே தேர்தல் நடாத்த நேரிட்டது. அதில் காந்தி கவிழவும் தொழிலாள வர்க்கத்தின் சுயதீனமான போராட்டம் தடம்புரளச் செய்யும் வீ. பி. சிங்கின் தலைமையிலான தேசிய முன்னணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினதும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினதும் ஸ்டாலினிஸ்டுகள் சேரத் தள்ளப்பட்டனர். இலங்கையில் இந்தியப் படைகளை வெளியேற்றுவது சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற சமயத்தில் ஜில் – மயூரா ஆடைதயாரிப்பு பக்டரிகளில் 4000க்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்துக்கு அணிதிரண்டதோடு மேலும் பலவேலைத் தலங்களிலும் போராட்டம் மூண்டது. பல வேலைத்தலங்களில் வேலைநிறுத்தம் வெடித்ததோடு முக்கியமாக அவை தொழிலாளர்களுக்கு எதிரான பொலிஸ்–இராணுவ தாக்குதல்களுக்கு எதிராக ஏற்பட்டவையாகும்.

மேலும் காஷ்மீரில் பாகிஸ்தானுடன் யுத்த வெறியை தூண்டிவிடவும், நேபாளத்தில் மக்கள் கிளர்ச்சிக்கு எதிராக தலையிடவும் வேண்டியிருந்த நிலையிலும் தமிழ் ஈழத்தில் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை வைத்திருப்பது இந்திய அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் மெழுகுதிரியை இரண்டு முனைகளிலும் பற்ற வைப்பதற்குக் சமானமானதாக விளங்கியது.

### பொறிவு

தமிழ் ஈழத்தில் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் அடைந்த தோல்வியானது 1947–48காலப்பகுதியில் ஏகாதிபத்திய வாதிகளதும் தேசிய முதலாளி வர்க்கத்தினதும் கூட்டினால் அமைக்கப்பட்ட முழு தேசிய முதலாளித்துவ அரச அமைப்புக்களதும் சரிவின் ஒரு பாகமாகும். எல்லாவற்றுக்கும் மேலாக உற்பத்தியின் உலகளாவிய அபிவிருத்திக்கும் காலவதியான அரச அமைப்புக்களுக்கும் இடையே அளவு கடந்த மோதுதல் ஏற்பட்டுள்ளது. இதனால் உலக முதலாளித்துவ நெருக்கடியின் தாக்கத்தில் கீழ் மேற்கொள்ள சமரசத்தினால் இரத்தம் தோய்ந்த விதத்தில் மூடி மறைக்கப்பட்ட தீர்வுகாணப்படாத அனைத்து ஜனநாயக, தேசிய இனப் பிரச்சினைகள் மீண்டும் வெடித்து தலைநீட்டியுள்ளன.

இந்தப் புறநிலையான நெருக்கடியின் அபிவிருத்தி இந்தியத் துணைக்கண்டம் பூராவும் தொழிலாள வர்க்கம் ஒடுக்கப்பட்ட மக்களின் தலைமைப் பதவியை ஏற்று தனது விதிமுறைகள் மூலம் தீர்வு காணப்படாத தேசிய ஜனநாயகப் பணிகளை தீர்த்து வைக்கும் பொருட்டு – தேசிய முதலாளி வர்க்கத்தினை தூக்கி வீசி உலக சோசலிசப் புரட்சியின் ஒரு பாகமாக தொழிலாளர் – விவசாயிகள் அரசாங்கத்தினை அமைப்பதற்கு முன்னொரு போதும் இல்லாத விதத்தில் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், சிங்கள தமிழ்தொழிலாளர்கள் இந்தியாவிலும் இந்திய துணைக்கண்டத்திலும் உள்ள தமது வர்க்க சகோதரர்களுடன் ஒன்றிணைக்க இந்த மூலோபாயத்தின் அடிப்படையிலேயே போராடி வருகின்றது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் குட்டி முதலாளித்துவ தேசியவாத தலைமை வெற்றி என்ற போர்வையில் தோல்வியை' அள்ளி அணைத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது சரியாக இத்தருணத்திலேயே.

விடுதலைப் புலிகள் அமைப்பின் துரோகமானது, ஏகாதிபத்தியத்துக்கும் தேசிய ஒடுக்குமுறையாளனுக்கும் எதிராக உறுதியான ஒரு போராட்டத்தினை நடாத்துகையில் தேசியவாத வேலைத்திட்டங்களதும் குட்டி முதலாளித்துவ இயக்கங்களதும் உடல்ரீதியான இயலாமையை எடுத்துக் காட்டுகின்றது. நமீபியாவின் சுவாபோ' தென் ஆபிரிக்காவின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மத்திய கிழக்கின் பீ. எல். ஓ. போன்ற சகல தேசியவாத இயக்கங்களதும் மோசமான நாற்றமெடுப்பின் மூலம் இது நன்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிகரகுவாவில் ஆட்சியைக் கைப்பற்றிய சன்டினிஸ்டா இயக்கம், சோமோசா சர்வாதிகாரியை தூக்கி வீசத் தோன்றிய மக்கள் இயக்கத்தினை அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்கியதோடுமட்டுமன்றி அது வேலைநிறுத்தப் போராட்டங்




தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையைப் பேணு! என்ற பதாகை
பு. க. க. ஆர்ப்பாட்ட ஊர்வலம்

படிப்பகம்

# புலிகளின் சமரசத்துக்கும் எதிராக யைப் பேணு!

களில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு எதிராகத் துப்பாக்கியை திருப்பியது. சன்டினிஸ்டா இயக்கத்தின் முதலாளித்துவ தேசியவாத பாஷை யானது இன்று சமோராவின் அமெரிக்க கைப்பொம்மை ஆட்சியளர்களிடம் ஆட்சியை ஒப்படைக்கவும் அந்த ஆட்சிக்கு எதிராகக் கிளம்பும் தொழிலாளர் போராட்டங்களின் எதிரில் மாஜி சன்டினிஸ்டா ஜனாதிபதி டானியெல் ஒட்டேகா ''நாம் இந்த அரசாங்கத்தினை தூக்கிவீசுவதில் அக்கறை காட்டோம். அதற்கு மாறாக நாம் உறுதிப் பாட்டினையிட்டே அக்கறை கொண்



தாங்கிய

ந்துள்ளோம்'' எனக் கூறி சமோரோ ஆட்சியின் லெப்டினன்டுகள் ஆகும் விதத்தில் திருப்பம் கண்டுள்ளது. இது பப்லோவாதம் முதலாளித்துவ தேசிய வாதத்துக்கும் அடிபணிந்ததும் நிரந்தரப் புரட்சியை காட்டிக் கொடுத்ததும் சம்பந்தமான பெரும் குற்றச் சாட்டாகும்.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு 1988ல் நிறைவேற்றிய உலக முன்நோக்குப் பிரேரணையினுள் செய்த ஆய்வினை சரியான தன்மையை இன்றைய அபிவிருத்திகள் பலம் வாய்ந்த முறையில் ருசுப்படுத்தி உள்ளன.

''உலக சோசலிசப் புரட்சி மூலோபாயத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரு கட்சி என்ற முறையில் அனைத்துலகக் குழு தனியொரு வர்க்க நிலைப்பாட்டினையே கடைப்பிடிக்கின்றது: தேசிய முதலாளித்துவத்தின் எந்தவொரு பிரிவினரின் கீழும் தொழிலாள வர்க்கத்தைக் கீழ்ப்படுத்துவதை நியாயப்படுத்தும் ''விதிவிலக்கான நிலைமைகள்'' எந்தவொரு நாட்டிலும் இருக்கப் போவதில்லை; இருக்கவும் முடியாது கம்யூனிஸ்ட் அகிலத்தின் முதல் நான்கு காங்கிரஸ்களின் காலப் பகுதியில் (1919-1922) பல நாடுகளில் இன்னமும் முதலாளித்துவ உறவுகள் அரிதாகவே வளர்ச்சி கண்டிருந்ததோடு மக்கள் தொகையில் பாட்டாளிவர்க்கம் புறக்கணிக்கத் தக்க எண்ணிக்கையையே கொண்டும் இருந்தது. அப்போது லெனின் முதிர்ச்சி அடையாத பாட்டாளி வர்க்கத்தினரிடையேயும் கூட அதன் சுயாதீனமான நலன்களைப் பற்றிய நனவினை விருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்தினர். ஏறத்தாழ 70 ஆண்டுகளின் பின்னர் ஒவ்வொரு கண்டத்திலும் ஏற்பட்டுள்ள முதலாளித்துவ உறவுகளின் பிரமாண்டமான வளர்ச்சிகளுக்கிடையே சகல ஒடுக்கப்படும் நாடுகளிலும் தேசிய முதலாளித்துவ வர்க்கம் அழுகி நாற்றமெடுத்ததை நிரூபித்த பரந்த வரலாற்று அனுபவங்களுக்கு இடையே தொழிலாள வர்க்கத்தின் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டத்தில் செய்யும் பின்னடிப்புக்கள் அதனை நிராயுதபாணியாக்கவும் தோல்விகளுக்கு தயார் செய்வதற்கும் மட்டுமே உதவும்.''

குட்டி முதலாளித்துவ தமிழ் தேசியவாதிகள் இந்திய - இலங்கை உடன்படிக்கை பற்றிய கசப்புமிக்க படிப்பினைகளில் இருந்து தாம் எதனையும் கற்றுக் கொள்ளவில்லை என்பதையும் ஏகாதிபத்திய, தேசிய முதலாளி வர்க்கத்தில் இருந்து சுயாதீனமான நிலைப்பாட்டினைக் கடைப்பிடிக்க தம்மால் அடியோடு முடியாது போயுள்ளது என்பதையும் நிதர்சனமாக்கியுள்ளனர்.

இந்திய - இலங்கை உடன்படிக்கையும் தமிழ் ஈழத்தில் இந்திய இராணுவத் தலையீடும் விடுதலை புலிகள் தலைமையின் ஆரம்ப ஆதரவினையும் ஒத்துழைப்பையும் பெற்றது. 1987 நவம்பர் 19ம் திகதி அனைத்துலகக் குழுவின் அறிக்கை குறிப்பிட்டது போல் ''இந்திய சூழ்ச்சியினதும், மோசடியினதும் விளைவாகவே தாம் புதுடில்லிக்கு விமானத்தில் செல்லவும், இலங்கை-இந்திய உடன்படிக்கையின் வாசகங்களுக்கு இணங்கவும் தீர்மானம் செய்ததாக பிரபாகரன் இன்று கூறுகின்றார். இந்தச் சாட்டு' தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கள்ளங்கபடம் அற்ற தன்மையை மட்டுமன்றி, குட்டி முதலாளித்துவ தேசியவாதத்தின் அரசியல் மலட்டுத் தனத்தையும் அம்பலப்படுத்துகின்றது, விடுதலைப் புலிகளின் தலைவர் காந்தியினால் ஏமாற்றப்பட்டிருப்பின் அதற்குக் காரணம், தமிழ் ஈழத்தின் சுயநிர்ணய உரிமையை அடைவதில் அதன் முழுக் கொள்கையும் இந்தியா முதலாளி வர்க்கத்தின் உதவியை வேண்டுவதன் அடிப்படையிலேயே கட்டிஎழுப்பப்பட்டு இருந்ததே இந்தப் பேராபத்து மிக்க தவறான கணிப்புக்கான மூலம் முதலாளித்துவ தேசியவாதத்தின் தவிர்க்க முடிய தவர்க்க முன்னோக்கும் வேலைத்திட்டமுமே.

''70 வருடங்களுக்கு முன்னர் லெனின் ஒரு ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் முதலாளி வர்க்கம் தனது சொந்த தேசிய சிறப்புரிமையை அடையவும் 'சுதந்திர' நாட்டினுள் தொழிலாளர். விவசாயிகளைக் சுரண்டுவதற்கான சிறந்த நிலைமைகளை நிலைநாட்டும் நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே சுயநிர்ணயத்தினை சூல் கொள்கின்றது என எச்சரிக்கை செய்தார். கூலி உழைப்பில் இருந்து உபரிப் பெறுமானத்தினைப் பிடுங்கிக் கொள்கின்ற—அதாவது தொழிலாள வர்க்கத்தினை அடிமைப்படுத்துகின்ற இந்தச் சுயநலம் ஒரு வர்க்கம் என்ற முறையில் முதலாளி வர்க்கத்தின் தன்மையில் புறநிலைரீதியாக வேரூன்றி உள்ளது. இந்த வர்க்கப் புறநிலையானது முதலாளித்துவ தேசியவாதிகளின் சகல கன்னைகளதும்-தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் போன்ற பெரிதும் தீவிரமான போக்குக்கள் உட்பட—கொள்கைகளை வழிநடத்துவதோடு அவற்றின் அரசியல் உடல் அமைப்பையும் நிர்ணயம் செய்கின்றது. ஒவ்வொரு கட்டத்திலும் முதலாளித்துவ தேசியவாதிகள் விடுதலைப் போராட்டம் ''கை கடந்து போய்' முதலாளித்துவ ஆட்சியின் பராமரிப்புக்கு ஒரு அச்சுறுத்தலாக இடமளிக்கா வண்ணம் பார்ப்பதில் அக்கறையாக உள்ளனர்.'



ஆர். பிரேமதாச

## ஏமாற்றம்

காந்திக்கு ஆதரவளிக்கும் பொருட்டு பிரபாகரன் ஏமாற்றப்பட்டிருந்தாலும் யூ.என்.பி இனவாத புள்ளிகளின் தலைவரான ஜனாதிபதி பிரேமதாசவை தமிழ் மக்களின் நண்பன் என துதிபாடும் பொருட்டு ஏமாற்றப்படவில்லை.

ஏப்ரல் 1ம் திகதி பத்திரிகையாளர் மத்தியில் பேசிய பிரபாகரன் விடுதலைப் புலிகள் தலைமை பிரேமதாச ஆட்சியாளர்களுடன் கடந்த ஆண்டு பூராவும் பேச்சுவார்த்தை நடாத்தியதாக குறிப்பிட்டார் அவர் மேலும் கூறியதாவது: ''தமிழர் பிரச்சினை சம்பந்தமாக பிரேமதாச அவர்களின் உறுதியானதும், புதியதுமான நிலைப்பாட்டினால் எமது பிரச்சினைக்கு மிகவும் விரைவில் தீர்வு கிட்டும்'' என்றார். பிரேமதாச அரசாங்கத்துடனான இந்தப் பேச்சுவார்த்தைகளை விபரிக்கையில் அவர் ''பரஸ்பரம் நம்பிக்கையையும், புரிந்துணர்வையும் அடிப்படையாகக்'' கொண்டவை என்றார். இந்தப் பேச்சுவார்த்தைகளின் பெறுபேறாக 'சமாதானமும், ஸ்திரப்பாடும் நிலைநாட்டப்படும்'' எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேற்குறிப்பிட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கையைப் போலவே இந்த பிரேமதாச - பிரபாகரன் உடன்படிக்கையும் ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் விடுதலைக்கான வழியன்றி அவர்களின் போராட்டத்துக்கான பெரும் அச்சுறுத்தலும் போராட்டத்தினைக்' காட்டிக் கொடுப்பதுமாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமை தமிழ் தொழிலாளர்களுக்கும், ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக இலங்கை ஆட்சியாளர்களின் பொலிஸ் காரர்களாக சேவை செய்ய இணங்கி உள்ளனர் 14ஆண்டு தீர்க்கமான போராட்டத்தின் மூலம் தமிழ் மக்கள் இனவாத ஆட்சியின் இராணுவம், பொலிஸ் இரண்டினையும் ஓட்டிக் கலைப்பதில் வெற்றிகண்டனர். இன்று விடுதலைப் புலிகள் தலைமை அவர்கள் திரும்பவும் நுழைய அழைப்பு விடுப்பதுடன் மட்டுமன்றி தமது செரில்லா போருடை அணிந்த போராளிகளை பொலிஸ் சீருடை அணிந்தவர்களாக்கவும் விருப்பம் தெரிவித்துள்ளனர்.



வே. பிரபாகரன்

இனவாத அரசு வடமாகாணத்தில் பொலிசாரினை மீண்டும் நிலைநிறுத்தும் முதல் முயற்சியிலேயே தமிழ் மக்களின் பெரும் எதிர்ப்பினைச் சந்தித்தது ஏப்ரல் மாதத்தில் பருத்தித்துறை வாசிகள் பொலிசார் பெண்களுடன் சேட்டைகளில் ஈடுபட்டதற்கு எதிராக கிளர்ந்து பொலிசாரை மூட்டையுடன், வெளியேற வைத்தனர்.

இச்சம்பவத்தின் பின்னர் ஜனாதிபதி பிரேமதாசவின் நீதி அமைச்சரான சாஹூல்ஹமீட் பிரபாகரனுடன் பேச்சுவார்த்தைக்காக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டார். இதன் பெறுபேறாக விடுதலை புலிகள் தலைவருக்கும் அரசாங்கத்துக்கும் இடையே ஏற்படுத்தப்

யுத்தத்தின் வெடிப்பின் முன்னர் வெளியானஇந்த அறிக்கை அதன் அரசியல் முக்கியத்துவம் குறித்து இங்கு பிரசுரமாகிறது.

பட்ட உடன்பாட்டின் பே
மக்களால் மூடப்பட்
பொலிஸ் நிலையத்தினை 4
மணித்தியாலயங்களுள் திறக்
உடன்பாடு காணப்பட்டது
இந்த உடன்பாட்டின் ஒ
பாகமாக பிரபாகரன் வி
தலைப் புலிகள் இயக்க
போராளிகளை ஆட்சியி
பொலிஸ் சேவைக்கு வழங்
வும் உடன்பட்டார்.

விடுதலைப் புலிகள் அமை
பின் அரசியல் பிரிவான வி
தலைப் புலிகள் மக்கள் முன்
னணியின் செயலாளரான
சோகரத்தினம் யோகி, 199
ஏப்ரல் 1ம் திகதி 'தமிழ் இன்
டர்நஷனல்' சஞ்சிகைக்
அளித்த பேட்டியில் இராணு
வத்தின் தலையீடு சம்பந்தமான
வரையறைகளை தாம் விதித்
திருந்ததாலேயே பொலிசாரை
மீண்டும் கொணர்வதை நியா
யப்படுத்தியதாகக் குறிப்பிட்
டிருந்தார். அவர் குறிப்பிட்டுள்
ளதாவது: ''இலங்கை இரா
ணுவம் சட்டம் அமைதிபற்றிய
பிரச்சினைகளில் தலையிடுவது
எமக்கு அவசியமில்லை. அதற்
குக் காரணம் அது அவர்களின்
கடமை இல்லாததே. அது
பொலிசாரின் கடமையாகும்
வட-கிழ் மாகாணங்களின்
வரையறைக்குட்பட்ட
இலங்கை இராணுவம் இருப்
பதை நாம் எதிர்க்கவில்லை.
அவர்கள் அவர்களின் இரா
ணுவ முகாம்களில் இருந்து
வெளியே சென்று அவர்களுக்கு
அவசியமானவற்றை விலைக்கு
வாங்கிக் கொண்டு முகாமுக்கு
திரும்ப முடியும். அவசர தரு
ணங்களைத் தவிர இலங்கை
இராணுவம் சட்டம், அமைதி
பற்றிய நடவடிக்கைகளில் ஈடு
படுத்தப்படக் கூடாது என
நாம் அரசாங்கத்துக்குக் கூறி
யுள்ளோம்''.

இதன் படி 'அவசர தருணங்
களைத்' தவிர்ந்த சமயங்களில்
தமிழ் மக்களை கொலை செய்ய
கூடாது என்ற ஒரே நிபந்தனை
யின் கீழ் தமிழ் ஈழம் பிராந்தி
யத்தில் இனவாத இராணு
வத்தை நுழைப்பதற்கு குட்டி
முதலாளித்துவ விடுதலைப் புலி
கள் தலைமை இணங்கியுள்ளது.
இந்த இணக்கமானது, கடந்த
இரண்டு தசாப்த காலங்களுள்
— இரண்டு குறுகிய காலப்
பகுதியைத் தவிர — இலங்கை
தொடர்ச்சியாக அவசரகால
ஆட்சிக் குட்பட்டுள்ள ஒரு
சமயத்திலேயே வழங்கப்பட்
டுள்ளது.

இன்று வட—கிழ் மாகாண
ஆளுனரான ஜெனரால் நளின்
செனவிரத்ன விடுதலைப் புலி
களிடம் இருந்து கிடைக்கும்
உதவி 'பேருதவியாக விளங்கு
கின்றது'' எனக் கூறியது எதிர்
பார்க்கக் கூடியதே. இந்தக்
கூற்றின் கடைசிப் . . .
த தினைப் புரிந்து கொள்ள
நளின் செனவிரத்ன . . .
தமிழ் மக்களை . . .
டும் இனவாத இராணுவத்தின்
. . .
பாக 1987க்கு முன்ன
தொழிற்பட்டவா என்பதை
மனங்கொள்ள வேண்டும்.

தொழிலாள வர்க்கம் ச
பந்தமான விடுதலைப் புலிகளின்
நிலைப்பாட்டினை . . . பிரே
தாச அரசாங்கத்துடன் ஏ
படுத்திக் கொண்டுள்ள சம
சத்தின் பிற்போக்குத் தன்மை
இன்று நன்கு தெளிவாகி உ
ளது விடுதலைப் புலிகளின் தி

18 -ம் பக்கம் பார்க்க )

www.padippakam.com



# இனவாத யுத்தத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சமரசத்துக்கும் எதிராக தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையைப் பேணு!

(17 ம் பக்கத் தொடர்ச்சி)

மலை மாவட்ட தலைவர் ரூபன் அரசாங்க அதிகாரிகளுடன் சேர்ந்து வேலைத்தலங்களை பரீட்சிப்பதில ஈடுபட்டு வந்தார். மத்திய போக்குவரத்துச் சபை தொழிலாளர்கள் சோம்பலின்றி வேலை செய்ய வேணடும்' எனக் கட்டளையிட்டார்.

அவர்களின் தொழிலாளர் விரோத தலையீடுகளின் மிகவும் கடைகெட்ட அம்சம் என்னவெனில் தொழிலாளர்கள் இன்றுள்ள தொழிற்சங்கங்களைக் கலைத்துவிட்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தொழிற் சங்கங்களில் சேரவேண்டும் எனக் கட்டளையிட்டதே இதன்படி சிங்கள, தமிழ் முதலாளிகள் இருசாராரும் நீண்டகாலமாக முயன்று, சரிவராது போன தமிழ்—சிங்கள தொழிலாளர்களைப் பிளவுபடுத்தும் எதிர்ப்புரட்சி இலக்கினைப் பூரணப்படுத்துவதற்கு குட்டி முதலாளித்துவ தேசியவாதிகள் முன்வந்துள்ளனர்.

பிரேமதாச ஆட்சியுடனான சமரசம் ''தற்காலிக உபாயம்' எனவும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மீண்டும் ஒடுக்குமுறை தொடுக்கப்படுமானால் திரும்பவும் கெரில்லா யுத்தத்தில் இறங்கத் தாம் தயார் எனவும் பிரபாகரன் கூறுவதை தமிழ் தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் அடியோடு வெறுத்து ஒதுக்க வேண்டும்.

இதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் 'தற்காலிக உபாயமான' இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கு உதவிவழங்கியதன் பலாபலன்களை மக்கள் ஏற்கனவே அனுபவித்துக் கொண்டுள்ளனர். இந்தப் புதிய உபாயமானது தமிழ் மக்களுக்கு முன்னையதைக்காட்டிலும் மோசமான விளைவுகளைக் கொணரும் நீண்ட போராட்டத்தின் மூலம் வென்றெடுத்த அனைத்தையும் எதிரியிடம் திரும்பக் கையளித்துள்ள ஒரு நிலைமையிலேயே இனவாத ஆட்சியாளர்களால் தொடுக்கப்பட்டுள்ள ஒடுக்குமுறைக்கு எதிராகப் புதிய கெரில்லா யுத்தத்தினை தொடுக்க வேண்டியிருக்கும்.

விடுதலைப் புலிகள் தலைமையின் வர்க்க நிலைப்பாடு சம்பந்தமாக எதுவித தற்காலிக தன்மையும் கிடையாது.

பிரேமதாச — பிரபாகரன் உடன்படிக்கையானது இதற்கு முன்னைய இந்திய — இலங்கை உடன்படிக்கையைப் போலவே தமிழ் தொழிலாளர் ஏழை மக்களின் இழப்புக்களின் மூலம் தமிழ் முதலாளி வர்க்கத்தின் நலன்களை பேணுவதை இலக்காகக் கொண்டது.

அவர்கள் வடக்கு கிழக்கில் தமது சலுகைகளை ஊர்ஜிதம் செய்யும் முயற்சிக்கு தென் இலங்கை இனவாத முதலாளித்துவ ஆட்சியாளர்களின் அங்கீகாரத்தினை வேண்டி நிற்கின்றனர். தமிழ் தொழிலாளர்களைச் சுரண்டும் பொருட்டு பன்னாட்டுக் கம்பனிகளுக்கு அழைப்பு விடுப்பதன் மூலம் அவர்கள் ஏகாதிபத்தியவாதிகளுக்கு நேரடியாக அழைப்பு விடுக்கின்றனர். இன்று 17 வருடகால விடுதலைப் போராட்டத்தின் பின்னர் மக்கள் யுத்த நெரிசலால்வெளி நாட்டு முதலாளிகளுக்குஇலாபமாக உழைப்பினை விற்பனை செய்யவும் உள்நாட்டு தமிழ் சுரண்டலாளர்களினால் தொடுக்கப்படும் ஒடுக்குமுறையை சகித்துக் கொள்ளவும் முன்வருவார்கள் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர்கள். ஆனால் அவர்கள் வெகு விரைவில் அது அப்படி அல்ல என்பதைத் தெரிந்து கொள்வர்.

இந்திய ஆக்கிரமிப்புப் படைகளுடன் கூட்டுச் சேர்ந்த ஈ பீ. ஆர் எல்.எப் டெலோ புளொட் ஈரோஸ் போன்ற, குழுக்கள் தமது விடுதலைப் போராட்டத்தின் துரோகிகள் என இனங்கண்டு அடித்துத்துரத்த தமக்கு சக்தி உண்டு என்பதை தமிழ் மக்கள் இனங்காட்டினர்கள். விடுதலைப் புலிகள் இயக்கம் சிங்கள இனவாத ஆட்சியாளர்களுடன் கூட்டுச் சேர்ந்தது தொடர்பான அவர்களின் நிலைப்பாடு இதிலிருந்து வேறுபட்டதல்ல என்பதை அவர்கள் நிரூபிக்கவே செய்வர்.

சமரசம் பொதுமக்களால் உடைக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் விடுதலைப் புலிகள் தலைமையையும் இலங்கை ஆட்சியாளர்களையும் ஆட்டிப் படைத்து வருகின்றது. இப்பீதி நாளுக்கு நாள் நன்கு தெளிவாகி வருகின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கோட்பாட்டாளனான அன்டன் பாலசிங்கம் தமது ஆதரவாளர்கள் 'அர்த்தமற்ற நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள்' எனக் கண்டித்துள்ளதோடு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன பாலசிங்கத்தின் வசனத்தினை அடிக்கடி உச்சாடனம் செய்வதோடு விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உள்ள தீவிரவாதிகளை' தாக்குகின்றார். விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களை ஆச்சரியப்படுத்தும் விதத்தில் பருத்தித்துறைச் சம்பவத்தில் அதன் ஆதரவாளர்களே ஈடுபட்டனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களுக்கு என்னதான் நப்பாசைகள் இருந்த போதிலும் இனவாத ஆட்சியாளர்களும், சிங்கள முதலாளிகளும் குட்டி முதலாளித்துவ தமிழ் தேசியவாதிகளிடம் தமது அதிகாரத்தில் ஒரு பங்கினை கையளிக்கும் எந்தவொரு நோக்கமும் கிடையாது சிங்கள முதலாளிகள் தமது எதிர்ப்புரட்சி இலக்குகளை அடையும் பொருட்டு தமிழ் தேசியவாதிகளைப் பாவித்தன் பின்னர், பிழிந்த தேசிக்காய் சோதினைப் போல் இவர்களை தூர வீசுவதே திட்டம்

சிங்கள முதலாளி வர்க்கத்தின் இந்த நிலைப்பாடு. சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அரசாங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு சலுகைகள் வழங்கி உள்ளது என்ற குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கையில் வெளியாகியது. பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன பதிலளிக்கையில் ''முன்னர் நீங்கள் ஜே வி. பி. எமக்கு வேலை தருவதாக கூறினீர்கள். ஆனால் கடைசியில் யார் யாருக்கு வேலை கொடுத்தது என்பதை நீங்கள் கண்டீர்கள்'' என்றார். வேலைவாசிகள் உயர்வு பற்றிய சுதந்திரக்கட்சி பிரச்சாரத்துக்கு பதிலடி கொடுக்கையில் ''அது ஓர் செத்த குதிரை. விடுதலைப் புலிகள் இயக்கம் விரைவில் செத்த குதிரையாகும்'' எனவும் குறிப்பிட்டார்.

## வங்குரோத்து

இந்த மிரட்டல்களின் முன்நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கம் தனது பூரண அடிபணிவினையும் வங்குரோத்தினையும் வெளிக்காட்டும் விதத்தில் ஒரு சில தினங்களுக்கு முன்னர் பொதுமக்களால் ஓட்டிக் கலைக்கப்பட்ட இந்திய முதலாளித்துவ ஆட்சியின் சக்திகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது. தமிழ் மக்களின் போராட்டம் எந்த விசத்திலும் இந்தியாவின் புவியியல், அரசியல் நோக்கங்களுடன் முரண்படாது எனவும் இந்தியஅரசின் உள்நாட்டு ஸ்திரப்பாட்டினை பலவீனப் அடையச் செய்யாது எனவும்சமீபத்தில் பிரபாகரன் விடுத்த அறிக்கையின் அர்த்தம், அதுவே. அவர் அந்த அறிக்கையில் எமது இயக்கத்துடன் நேச உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும்படி'' வி. பி சிங் அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்தார்.

பிரேமதாச — பிரபாகரன் சமரசம், வெறும் தமிழ்தேசிய இனப் பொது மக்களின் போராட்டத்தினைக் காட்டிக் கொடுப்பது மட்டுமன்றி பிரேமதாச ஆட்சிக்கு எதிராக கிளர்ந்துள்ள தெற்கின் தோட்டத்துறை, நகர்ப்புற தொழிலாள வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிரான தாக்குதலுமாகும்,

இருதேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக கோரமானதாக்குதலை யூ,என். பி. அரசாங்கம் தொடுத்துள்ள ஒரு நிலையிலேயே இந்த உடன்படிக்கை உருவாகி உள்ளது. சர்வதேச நாணய சபையின் கட்டளையின்படி பிரேமதாச அரசாங்கம் உரமானியத்தினை ஒழித்துக் கட்டியுள்ளது இதனால் விவசாயிகள் பயிரிடும் நிலங்களில் நாலில் ஒரு பங்குக்கு மேற்பட்ட நிலத்தில் பயிர் செய்கையில் ஈடுபடவில்லை. ஆட்சியாளர்களின் தனியார் மயமாக்கத்தின் கீழ் இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் அரசாங்க, கூட்டுத்தாபன தோட்டத் துறைகளில் நாசமாக்கப்பட்டுள்ளன லவச சௌக்கியத் சேவையிலும் இலவசக் கல்வியிலும் பரந்தளவிலான வெட்டுக்கள் நடைமுறைக்கு வந்துளளன.

உலக வங்கி தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை சரி அரைவாசியாக வெட்டும்படி ஆலோசனை வழங்கி உள்ளது. இந்தத் திட்டத்தினை நடைமுறைப் படுத்தும் பொருட்டு ஆட்சியாளர்கள் தயாராகி வருகின்றனர். இதற்கு எந்த விதிமுறையைக் கையாள்வது எனவும் ஆலோசித்து வருகின்றனர். பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரான ரஞ்சன் விஜேரத்ன தோட்டக் கைத்தொழில் அமைச்சராக இரண்டாவது அமைச்சர் பதவிக்கும் நியமனம் செய்யப்பட்டமை இத் தயாரிப்புக்களைக் காட்டுகின்றது.

கிராமப் புறங்களில் பாசிச ஜே. வி.பி.யினை ஒடுக்கும்சாட்டில் ஆரம்பமான ஒடுக்குமுறை இயக்கம், ஜே. வி. பி. தலைவர்கள் கொல்லப்பட்டு அவ்வியக்கம் சித்துண்டு போனதன் பின்னரும் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது, ஆயுதம் தாங்கிய படைகள், அரை— இராணுவ குண்டர் கும்பல்களால் கொலைசெய்யப்பட்ட டசின் கணக்கான இளைஞர்களின் சடலங்கள் தினமும் டயர்களின் மேல் வெந்து பொசுங்கிக் கொண்டுள்ளன.

இந்நிலையில் ஆளும் வர்க்கத்தின் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க சிங்கள, தமிழ் தொழிலாளர்களதும் ஒடுக்கப்படும் மக்களதும் ஐக்கியம் தீர்க்கமானது இனரீதியில் தொழிலாள வர்க்கத்தினைப் பிளவுபடுத்த முயல்வதன் மூலம் விடுதலை புலிகள் இயக்கம், அது ஏகாதிபத்தியத்தினதும்தேசிய முதலாளி வர்க்கத்தினதும் கையாள் என்பதை காட்டிக் கொண்டுள்ளது.

பிரேமதாசஅரசாங்கத்துக்கு எதிராக எந்தவொரு போராட்டத்தினையும் நடாத்துவதைக் கைகழுவி விட்டவர்களும்,ஜே வி. பி. பாசிஸ்டுகளின் தாக்குதலின் எதிரில் ஸ்தம்பித்துப் போனவர்களுமான சகல துரோகி அதிகாரத்துவங்களும் இன்று தமிழ் தொழிலாளர் அமைப்புக்களின் மேல் விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்தினை நிறுவும் முயற்சிக்கு மூச்சும் காட்டாது இணங்கிக் கொண்டுள்ளனர். உதாரணமாக பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் தொழிற்சங்கங்களை கலைக்குமாறு விடுதலைப் புலிகள் விடுத்த வேண்டுகோளுக்கு நவ சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சியின் தோழைத் தலைவர்கள் ஏற்கனவே இணங்கிக் கொண்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினைப்போலவே தொழிலாளர் இயக்கத்தின் இந்தக் குட்டி முதலாளித்துவ அதிகாரத்துவங்களும், தமிழ்தேசிய இனத்தின் நன்மைக்காக எனக் கூறி இந்திய — இலங்கை உடன்படிக்கைக்கு ஆதரவளித்தவர் இன்று அவர்கள் மக்களிற்கு குழிதோண்டும் பொருட்டுபடு கேவலமான தமிழர் விரோத இனவாதத்திற்கு திரும்பிய ஜே வி பி. பாசிஸ்டுகளது ஆதரவாளர்களான இனவாத சக்திகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்த இனவாதத்துக்கு தோள்கொடுக்கும் மிகவும் கேவலமான அறிக்கைகளை ஸ்டாலினிஸ்டுகளின் 'அத்த' பத்திரிகையில் காண முடியும். அவர்கள் கூறுவது இதுதான்: ''பிரமதாச அரசாங்கத்தின் புதிய கர்மங்களின் விளைவுகள் வட—கிழ் மக்கள் பக்கம் இருந்து வரும்போது இன்று இராணுவமும் பொலிசுமே அவற்றை கடுமையாக உத்தரிக்க நேரிட்டுள்ளது பிரேமதாச அவர்கள் 'புலிகளுடன் மோதாதிருக்கும்' சமயத்தின் புண்ணியத்தால் இலங்கை இராணுவத்தின் ஆட்கள் புலிகளின் பெருமிதத்தினை சகித்துக் கொண்டு மடங்கிப் போய் கிடக்கின்றனர். 'சாமான் வாங்க சந்தைக்கு வருவதானால் துவக்கு இல்லாமல் வா'' எனக் கூறினால் அந்த உத்தரவினை கடைப்பிடிக்கிறார்கள். பொலிசின் ஆட்களைப் பிடித்துக் கொண்டு போய், தடுத்து வைத்து மணிக்கணக்காக கேள்வி கேட்டால் . . .

('அத்த' ஏப்ரல் —22)

எல்லாவற்றிற்கும் மேலாக பிரேமதாச ஆட்சி விடுதலைப் புலிகள அமைப்பின் அங்கத்தினர்களை பொலிசுக்கு சேர்க்க இருப்பதையிட்டு ஸ்டாலினிஸ்டுகள் பெரிதும் குழம்பிப் போயுள்ளனர். அத்தகைய நடவடிக்கையால் ''கல்வி, நற்சாட்சி பத்திரங்களின் அடிப்படையில் இதுவரை செய்யப்பட்ட கனவான்களை கொண்ட பொலிசு'' நாசமாய்ப் போய் விடும் என இவர்கள் சிணுங்குகின்றனர்.

பொலிஸ், இராணுவத்தின் ''கனவான்கள்'' தொழிலாளர்களையும் இளைஞர்களையும் தினமும் கொல்வதோடு வட— கிழ் மாகாண தமிழ் தேசிய இனத்துக்கு எதிராகப் புதிய இரத்தம் தோய்ந்த தாக்குதல்களுக்கு முஸ்தீபுகள் செய்யும் நிலைமையின் கீழ் ஸ்டாலினிஸ்டுகள், தொழிலாள வர்க்கத்தினை அரச ஒடுக்குமுறையின் எதிரில் அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்கத் திட்டமிட்டுச்செயல்பட்டு வருகின்றனர்.

சிங்கள தமிழ் தொழிலாளர்கள் தம்பின்னால் உள்ள ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினர், ஏழை விவசாயிகளை அணிதிரட்டி, தமிழ் மக்களின் தேசிய உரிமைகள் உள்ளடங்கலான தீர்க்கப்

(19 -ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



# இனவாத யுத்தத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் . . .

(18 ம் பக்கத் தொடர்ச்சி)

படாத ஜனநாயகப் புரட்சியின் பணிகளை தீர்த்து, சோசலிச நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தினை கட்டி எழுப்புவதற்கான போராட்டம் சமசமாஜ-கம்யூனிச - இ. தொ. கா, நவ சமசமாஜ கட்சித் தலைவர்களால் குழிபறிக்கப்பட்டது.

## நம்பிக்கை தகர்வு

டப்லோவாத ஐக்கிய செயகத்தினின் அங்கீகாரத்துடன் 1964ல் சமசமாஜ கட்சி இழைத்த காட்டிக் கொடுப்பு, சிங்கள, தமிழ் ஒடுக்கப்படும் மக்களிடையே புரட்சிகர தேசிய ஐக்கியத்தினைக் கட்டி எழுப்புகையில் தொழிலாள வர்க்கத்தின் நேர்மை தொடர்பான தமிழ் தேசிய இனத்தின் நம்பிக்கை தகர்ந்துபோகக் காரணமாகியது. அதன் மூலம் தேசிய வழிகளைச் சிபார்சு செய்யும் குட்டி முதலாளித்துவ தீவிரவாத இயக்கங்களுக்கு கதவு திறந்தது. தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைமையைவிடுதலைப் புலிகள் போன்ற குட்டி முதலாளித்துவ தலைவர்கள் கைப்பற்றிக் கொள்ள இடமளித்து ஒடுக்கப்படும் தமிழ் மக்கள் தொழிலாள வர்க்கத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டது சமசமாஜக் கட்சி முதலாளித்துவ வர்க்கத்தின் பிற்போக்கு, இனவாத அரசுக்கு அடிபணிந்த தன் விளைவே இது.

தெற்கில் சமசமாஜ — கம்யூனிஸ்ட் தலைவர்களின் மக்கள் முன்னணிக் காட்டிக் கொடுப்பின் ஊடாக கிராமப்புற ஏழைகளும் குட்டி முதலாளித்துவத்தின் ஒடுக்கப்பட்ட தட்டினரும் தொழிலாள வர்க்கத்தில் இருந்து வேருக்கப்பட்டு அவர்கள் முதலாளித்துவ அரசியல் சூழ்ச்சிகளுக்கு பலியாக்கப்பட்டனர். இதனால் ஜே.வி.பி. வளர்ச்சி காணவும் யூ.என்.பி—ஸ்ரீ. ல.சு.க சிங்கள இனவாத முதலாளித்துவக் கட்சிகளின் பிடி இறுகவும் நேர்ட்டது.

சமசமாஜ—கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் நச்சுத்தனமான மக்கள் முன்னணியின் பெரும் துரோகம் என்னவெனில் ஏகாதிபத்திய எதிர்ப்புக் காலகட்டத்தில் இருந்து ஜனநாயக சோசலிச கோரிக்கைகளின் அடிப்படையில் சிங்கள தமிழ் தொழிலாளர்களை ஐக்கியப்படுத்தும் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டும் போராட்டத்தின் புரட்சிகரச் சம்பிரதாயங்களை நசுக்கியதே.

## பு. க. க

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்த வரலாற்று காட்டிக் கொடுப்புக்கு எதிரான போராட்டத்திலேயே உதயமாகியது.

சோசலிசப் புரட்சி மூலம் முதலாளித்துவ ஆட்சியை தூக்கி வீசும் பொருட்டு

களையும், ஒடுக்கப்படும் மக்களையும் ஐக்கியப்படுத்தும் அடிப்படையில் தமிழ் மக்களின் தேசிய உரிமைகளுக்காகச் சமரசம் இன்றி போராடியது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே.

## போராட்ட வரலாறு

ஸ்ரீ. ல. சு. க, சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டரசாங்கத்தின் மூலம் திணிக்கப்பட்ட இனவாத அரசியலமைப்புச் சட்டத்தினை எதிர்த்த காரணத்துக்காக பு. க. க. தலைமையினைக் கொண்ட அரசாங்க அச்சக தொழிலாளர் சங்கம், 1972ல் அரசாங்க தொழிற்சங்க சம்மேளனத்தில் இருந்து வெளியேற்றப்பட்டது 1977ன் பின்னர் யூ. என். பி. அரசாங்கம், தமிழர் விரோத மக்கள் படுகொலையைக் கட்ட விழ்த்த வேளையில் அதனை எதிர்த்துப் போராடிய பு.க.க. இராஜாங்களை அமைப்பாளரானதோழர் ஆர். பி. பியதாச யூ. என். பி, பொலிசாராலும், கைக்கூலி குண்டர்களாலும் கொலைசெய்யப்பட்டார். 1983ல் தமிழர் விரோத தாக்குதல் இனவாத யுத்தமாக உயர்ந்த வேளையில், பு. க, க. அதனது புரட்சிகர வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாக தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடியது. 1987ல் இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்புடன் இந்திய—இலங்கைஉடன்படிக்கைக்கு ஆதரவு தந்த அனைவருக்கும் எதிராக பு.க.க அந்தப் பிற்போக்கு உடன்படிக்கையை நீக்கவும் இந்திய படையை துரத்தி அடிக்கவும் போராடி வந்தது.

பிரேமதாச — பிரபாகரன் இடையேயான இன்றைய உடன்படிக்கையின் எதிரில் பு. க. க, தொழிலாள வர்க்க, அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் குட்டி முதலாளித்துவ தேசியவாதத் தலைமையின் இரத்தம் தோய்ந்த கொடுக்கல்வாங்கல்களுக்கு எதிராக தமிழ் மக்களின் தேசிய உரிமைகளைக் காக்க மீண்டும் சபதம் பூணுகிறது.

சிங்கள—தமிழ் தொழிலாள வர்க்கத்தின் சுலோகமானது வட—கீழ் மாகாணங்களுக்கு முதலாளித்துவ அரச படைகளை அனுப்புவதை நிறுத்து! முதலாளித்துவ அரச படைகளைக் கலை! என்பதாக வேண்டும்.

தமிழ் தொழிலாள வர்க்கத்தின் மேலும் அவர்களின் அமைப்புக்களின் மேலும்தமது ஆளுமையை நிறுவி அவற்றினை ஏகாதிபத்திய வாதிகளுடனும் சிங்கள முதலாளி வர்க்கத்துடனும் தாம் நடாத்திவரும் தொடர்புகளின் கருவியாகப் பாவிக்க விடுதலைப் புலிகள் செய்யும் முயற்சிகளை நாம் சமரசமின்றி எதிர்க்கின்றோம்; தொழிலாளர்களின் தொழிற்சங்கங்களைக் கலைக்கும் பொருட்டு விடுதலைப் புலிகள் இயக்கம் துரோக அதிகாரத்துவங்களின் ஆதரவுடன் செய்யும் முயற்சியை எதிர்த்துக்

மாகாணத் தொழிலாளர்களை வேண்டுகின்றோம்.

தமிழ், சிங்கள தொழிலாளர்களின் ஐக்கியத்தினை உடைக்க இணங்குகின்றதும் தொழிற்படுகின்றதுமான அதிகாரத்துவங்களை துரத்தி அடிக்கப் போராடுவதன் மூலம் தெற்கின் தொழிலாள வர்க்கம் தனது தமிழ் சகோதரர்களின் பாதுகாப்புக்கு முன்நிற்க வேண்டும்.

வட—கீழ் மாகாணங்களில் பொலிஸ்—இராணுவ நிர்வாகத்தினை மீண்டும் அமைக்க விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதரவுடன் பிரேமதாச ஆட்சி நடாத்தி வரும் சதிக்கு எதிராக ஒடுக்கப்படும் மக்களை முழுமையாக தம்பக்கம் அணிதிரட்டி, தொழிலாளர்கள் தமது சுயாதீனமான ஆட்சி அமைப்புக்களை சோவியத்துக்களை கட்டி எழுப்பவேண்டும்.

வட—கீழ்மாகாணங்களுக்கு திரும்பவும் அனுப்பப்படும் பொலிசும், இராணுவமும் ஏற்கனவே தெற்கில் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக பயங்கரத்தினை கட்டவிழ்த்து விட்டுள்ளது; இந்நிலையில் தெற்கில் உள்ள தொழிலாளர்களின் எதிரில் சோவியத் சபைகளை நிறுவி ஒடுக்கப்படும்மக்களை போராட்டத்தில் ஈடுபடுத்தும் அவசியம் உருவாகி உள்ளது.

இனவாத ஒற்றை ஆட்சியை ஒழித்து, தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை உத்தரவாதம் செய்கின்றதும் நிச விவசாய சீர்திருத்தம் மூலம் கிராமப்புற மக்கள் தொடர்பாக தீர்க்கப்படாத ஜனநாயகப் பணிகளை தீர்த்து வைக்கின்றதும், முதலாளித்துவ அரசின் சகல ஒடுக்குமுறைச் சட்டங்களையும் நீக்குகின்றதுமான அரசியல் அமைப்புச் சபையைக் கூட்டும் போராட்டத்துக்கு சிங்கள — தமிழ் தொழிலாள வர்க்கம் ஒன்றிணைய வேண்டும்.

ஆறுவது அரசியல் சட்ட திருத்தத்தினை நீக்கும்படி விடுதலைப் புலிகள் இயக்கம் நடாத்திவரும் வெற்றுப் பிரச்சாரத்துக்குப் பதிலாக ஏகாதிபத்தியவாதிகளுக்கும் தேசிய முதலாளிகளுக்கும் இடையேயான சதியின் மூலம் திணிக்கப்பட்டு, பின்னர் ஆட்சிக்கு வந்த சகல இனவாத முதலாளித்துவ அரசாங்கத்தினாலும் நச்சு விசமூட்டி பலப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சி அரசின் முழு அரசியல் அமைப்பினையும் தூக்கி வீசும் பொருட்டுதொழிலாள வர்க்கம் போராட வேண்டும். ஆறுவது அரசியல் சட்ட திருத்தத்தினை நீக்கும்படி விடுதலைப் புலிகள் இயக்கம் விடுக்கும் கோரிக்கையானது இந்திய — இலங்கை உடன்படிக்கை மூலம் திணிக்கப்பட்ட மாகாண சபைகளை அங்கீகரிப்பதானது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தினைக் கைவிடுவதை மூடி மறைப்பதற்கான குட்டி முதலாளித்துவ தேசியவாதிகளின் ஒரு மூடுதிரையாகும்; இந்த மாகாண சபைகள் எனப்படுவது பாராளுமன்றத்தினை வெற்றுக் கோம்பையாக்கி வாக்காளர்களின் 1/4 பங்கிற்

ணிக்கை மூலம் ஆட்சிக்கு வந்த ஒரு ஜனாதிபதி, இராணுவம், பொலிஸ், நிர்வாக அதிகாரிகளைக் கொண்ட ஒரு ஆலோசனைச் சபை மூலம் ஆட்சியை நடாத்தும் ஒரு பொனபாட்டிச ஆட்சியின் கருவிக்கு அப்பாற்பட்டதல்ல. சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ — இ தொ.கா தலைவர்களும் மற்றும் மத்தியவாத துரோகிகளும் அத்தோடு விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களும் இன்று அடிபணிந்துள்ளது, இந்த அரசுக்கே.

வடக்கிலும், தெற்கிலும் தொழிலாள வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் ஜனநாயக உரிமைகளை முதலாளித்துவ அரசினை தூக்கி வீசி, தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொணர்வதன் மூலம் மட்டுமே பாதுகாக்க முடியும்; பொது மக்களின் அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தும் நிச அரசியல அமைப்புச் சபையினை, முதலாளித்துவ அரசினை புரட்சிகரமான முறையில் தூக்கிவீசும் போராட்டத்தின் அடிப்படையில் மட்டுமே நிறுவ முடியும்;

தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையையும் உள்ளடக்கிய தேசிய ஜனநாயக உரிமைகளை உறுதி செய்தல், காணி, கிராமியக் கடன் உதவி மானியம் முதலான ஒடுக்கப்பட்ட விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்த்தல், இராணுவ — பொலிஸ் ஒடுக்குமுறையை நிறுத்தி அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், இளைஞர் வேலையின்மையை நீக்கி, கல்வி உரிமையை உறுதி செய்தல், தோட்டத்தொழிலாளர்களின் குடியுரிமையை வழங்கல், தொழில்களை நாசமாக்கும் சகல திட்டங்களையும் ஒழித்தல் வெளிநாட்டுக்கடன்களை திருப்பிச் செலுத்துவதை நிராகரித்தல், இலவச சுகாதார சேவை உட்பட்ட அனைத்து சேமநல சேவைகளையும் மீண்டும் நடைமுறைப்படுத்தல் முதலான சகல நடவடிக்கைகளையும் எடுக்க சிங்கள — தமிழ்தொழிலாளர்களை ஒன்றிணைந்து ஒடுக்கப்படும் மக்களை தம்மைச்சூழ அணிதிரட்டி, சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஆரம்பிப்பை மேற்கொள்ள வேண்டும்.

முதலாளித்துவ அரச படைகளதும் ஜே. வி. பி. பாசிஸ்டுகளதும் தாக்குதல்களுக்கு எதிராகத் தொழிலாள வர்க்கம் அமைப்புக்களின் ஐக்கிய முன்னணியும், நடவடிக்கை குழுக்களும் தொழிலாள வர்க்கத்தினதும் அதன் தொழிற்சங்கங்களதும், வசிப்பிடங்களதும், அரசியல் கட்சிகளதும் பாதுகாப்புக்காக அமைக்கப்பட வேண்டும் என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கடந்த காலப் பகுதியில் அழைப்பு விடுத்தது; இந்த அழைப்பினை, பிரேமதாச ஆட்சியுடனும் அரசுடனும் நெருங்கி உறவாடிய சகல துரோக அதிகாரத்துவங்களும் ஒரேயடியாகப் பகிஷ்கரித்தன; அதன் மூலம் அவர்கள் பிரேமதாச ஆட்சியின் அரசியல் ஆளுமையை நிலைநாட்ட தலைகொடுத்து நின்றனர்.

இது மீண்டும் ஒரு கடவை

வரலாற்று அனைத்துலகவாத வேலைத்திட்டத்தின் அடிப்படையில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே தொழிலாள வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் அவசியமான புரட்சித் தலைமையை உருவாக்குவதில் வெற்றி பெறும் என்பதை பலம் வாய்ந்த முறையில் ஊர்ஜிதம் செய்தது.

தமிழ் தேசிய இனத்துக்கு எதிராக மீண்டும் இராணுவத்தினை தலையிடச்செய்யும் மிரட்டலுக்கும், தெற்கில் கிராமப்புற ஏழை மக்களுக்கு எதிரான இரத்தம் தோய்ந்த ஒடுக்குமுறைக்கும் அரசாங்கத் துறையிலும் கூட்டுத்தாபன துறையிலும் பிரமாண்டமான தொழில் வெட்டுக்கும் தோட்டத் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்து இந்தியாவுக்கு நாடுகடத்தவுள்ள மிரட்டலுக்கும் எதிராக தொழிலாள வர்க்கம் இன்று பொது வேலை நிறுத்தம் மூலம் பதிலளிக்கத் தயாராக வேண்டும்; இந்தப் பொது வேலைநிறுத்தத்தில் அனைத்து ஒடுக்கப்படும் மக்களையும் தொழிலாளவர்க்கத்தினைச் சூழ அணிதிரட்டி, இலங்கை— தமிழ்ஈழம் சோசலிச குடியரசாக தொழிலாளர்— விவசாயிகள் அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொணரும் வேலைத்திட்டத்தின் மூலம் தொழிலாள வர்க்கத்தினை ஆயுதபாணியாக்க வேண்டும். தொழிலாள வர்க்கத்தின் சகல அமைப்புக்களதும் பேராளர்களைக் கொண்ட பேராளர் மகாநாட்டில் இந்த வேலைத்திட்டத்தினை நிறைவேற்றி, அதன்படி செய்ய வேண்டிய நடைமுறை அமைப்பு நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்ய அழைப்பு விடுத்தல் அவசியம். பு. க. க. அதற்கான அழைப்பினை விடுக்கின்றது.

இந்த வேலைத்திட்டத்துக்காகப் போராடும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துடன் சேர்ந்து, அந்த வேலைத்திட்டத்தினை அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தினையும் ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்டும் போராட்டத்தில் இணையுமாறு நாம் சகல போராளிகளையும் அழைக்கின்றோம்.

– 1990 ஜூன் 30

## நெருக்கடி . . .

(15 -ம் பக்கத் தொடர்ச்சி)

“பெருக நாட்டின் அனைத்துலக நிதி நிலைமையில் பாதகமான விளைவுகள் ஏற்படுவதை தவிர்க்க முடியாது” எனவும் சோல் குறிப்பிட்டுள்ளார். இவை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்டாலினிச அதிகாரத்துவம் எந்த விதத் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களுடன் கலந்துறவாடுகின்றது என்பதற்கு நல்ல எடுத்துக் காட்டாகும்; சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் தொழிலாள வர்க்கம் அதிகாரத்துவத்தினை தூக்கிவீசும் ட்ரொட்ஸ்கிச அரசியல் புரட்சி வேலைத் திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்...

www.padippakam.com



# 13 -னவாத யுத்த மூலம் சர்வாதிகார திட்டங்கள் இறுக்கம்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பக்டரிகளின் எதிரில் ஏற்றி, 'தேசிய பாதுகாப்பு நிதிக்கு' இலட்சக் கணக்கான ரூபாய்களை 'தியாகம்' செய்து வரும் முதலாளிகள் பக்டரிகளை மூடுதல், வேலை துரிதப்படுத்தல், ஜனநாயக உரிமைகளை ஒழித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இதன் மூலம் நெருக்கடியின் சுமைகளை தொழிலாளர்களின் தலைகளில் சுமத்த முயன்று வருகின்றனர். இரத்மலானை யோல்டெக்ஸ் 200 தொழிலாளர்களும், புகையிரத உபரி பாகங்கள் உற்பத்து செய்யும் மெஷின் லைன் கம்பனியின் 70 தொழிலாளர்களும் கதவடைப்புக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். கியூம் பைப் கம்பனியின் தொழிலாளர்கள் ஜூலை மாதத்தில் இருந்து வேலை நீக்கம் செய்யப்படும் மிரட்டலுக்கு உள்ளாகியுள்ளனர்.

3. பாசிச ஜே. வி. பி.யை ஒடுக்குவதாகக் கூறிக்கொண்டு கடந்த ஆண்டின் நடுப் பகுதியில் இருந்து இவ்வாண்டு ஜனவரி மாதம் வரை ஒரு இலட்சம் கிராமப்புற இளைஞர்களை கொலை செய்து டயர் தீயினுல் சுட்டுப் பொசுக்கியும், ஆறுகளில் வீசியும் நாசமாக்கி வந்த அரசாங்கம் இன்று இனவாத திரையின் பின்னணியில் கிராமப்புறங்களில் மீண்டும் பயங்கர தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது. கடந்த சிலதினங்களில் தயபுத்கேகம, பொத்து பிட்டிய, திகன, கம்பளை, கலகெதர முதலான இடங்களில் மட்டும் கொன்றுஎரிக்கப்பட்ட 50 இளைஞர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மாத்தறை மாவட்டத்தில் பந்தன் தர, கொபன கொடவில் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட இளைஞர்களின் சடலங்கள் கிடந்தன'

இந்தச் சடலங்களில் பல தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டு வட—கீழ் மாகாண யுத்தத்தைத் தொடர்ந்து கொலை செய்யப்பட்ட சிங்கள கிராமப்புற இளைஞர்களின் சடலங்கள் என சந்தேகிக்கப்படுகின்றது. ஏனையவை தற்சமயம் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்படும் கிராமப்புற இளைஞர்களாகும்.

தென் மாகாணங்களில் 'குழப்பங்களை உண்டுபண்ணுபவர்களை' கண்ட இடத்தில் சுடும் புதிய உத்தரவு பொலிசாருக்கு விடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இவை அனைத்தும் வட—கீழ் மாகாணங்களில் இடம் பெறும யுத்தத்துடன் இலங்கைத் தொழிலாளர்கள், ஏழைகளின் போராட்டம் வெடிக்கும் என யூ. என். பி. அரசாங்கம்உள்ளடங்கலான முதலாளித்துவ ஆளும் வர்க்கம் மரண பயம் கொண்டுள்ளதைக் காட்டுகின்றது.

யுத்தத்தினைத் தொடர்ந்து புதிய மட்டத்துக்கு வளர்ச்சி பெறும் இந்த அரசியல் நிலைமை, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் முன்வைத்த முன்நோக்கினை பலம் வாய்ந்த முறையில் ருசுப்படுத்தியுள்ளதோடு அந்த புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் சிங்கள — தமிழ் தொழிலாள வர்க்கத்தின் தலைமையில் கிராமப்புற ஏழைகளை போராட்டத்துக்கு அணிதிரட்டுவதற்கான அவசியமும் அவசரமும் உருவாகி உள்ளது.

இலங்கை உட்பட இந்திய துணைக்கண்டப் பிராந்தியநாடுகளில் ஏகாதிபத்திய அமைப்பு நெருக்கடியும், அதன் பெறுபேறுக இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் உலக முதலாளித்துவ அமைப்பினை பராமரிக்க உருவாக்கப்பட்ட தீர்வுகளின் பொறிவும் கூர்மையான முறையில் வெளிப்பாடாகி உள்ளது.

1947—48ல் காலனித்துவ ஆட்சியாளர்கள் ஏகாதிபத்தியத்தின் கனிஷ்ட உதவியாளர்களான முதலாளிகளின் கைகளுக்கு ஆட்சியை மாற்றினர், இன, மத பிளவுகளின் அடிப்படையில் செயற்கையான முறையில் தேச எல்லைகள் நிர்மாணிக்கப்பட்டன. இந்தவம்பு அரசுகள், தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளை நசுக்குவதற்கென்றே அமைக்கப்பட்டன.

ஏகாதிபத்திய நெருக்கடி உக்கிரம் கண்டதைத் தொடர்ந்து இந்நாடுகளில் தொழிலாள ஒடுக்கப்படும் மக்கள் தொழில் வாழ்க்கைத்தரம், உதவி மானிய சேமநல சேவைகள், ஜனநாயக உரிமைகள் வெட்டுக்களுக்கு எதிராக கிளர்ந்து எழுந்துள்ளனர். யுத்தம் இந்த வெகுஜனக் கிளர்ச்சிக்கு எதிரானதாகும்.

1989ல் 20700 கோடி ரூபாய்களாக இருந்த வெளிநாட்டுக் கடன் 1990 24050 கோடி ரூபாக்களாக அதிகரித்துள்ள நிலையிலேயே பிரேமதாச அரசாங்கம் 'தாய்நாடு' காக்கும் சவாரியில் இறங்கி, உழைப்பையும், வழங்களையும் சூறையாட வருமாறு ஏகாதிபத்திய முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

ஸ்டாலினிஸ்டுகள் ஆரம்பத்தில் இருந்தும், பின்னர் பப்லோவாதிகளும் 'ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய முதலாளித்துவ தலைவர்கள்' என அரவணைத்துக் கொண்ட ஆட்சியாளர்கள் தேடிக் கொண்டது இந்த வம்பு அரச அமைப்பினையே. ஏகாதிபத்திய நெருக்கடியின் ஒரு பாகமாக உக்கிரமடைந்து வரும் இந்நாடுகளின் நெருக்கடியின் மத்தியல் தொழிலாளர்களும், ஏழை விவசாயிகளும் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களும் ஏகாதிபத்திய தீர்வின் மூலம் உருவாக்கப்பட்ட இந்த அரச அமைப்புக்களுக்கு எதிராக கிளர்ந்து எழுந்துள்ளனர். இக்கிளர்ச்சி கடந்த பல ஆண்டுகளாக வளர்ச்சி கண்டு வருகின்றது. முதலாளித்துவ ஆட்சியை காக்கும் பொருட்டு இந்தியாவிலும் இலங்கையிலும், பாகிஸ்தானிலும் பர்மாவிலும், நேபாலத்திலும், பங்களாதேசிலும் ஆட்சியாளர்கள் இப்போராட்டங்களை நசுக்குவதற்கான கொலைகார யுத்தத்திலும், பயங்கர இராணுவத் தாக்குதலிலும் ஈடுபட்டுள்ளனர்.

காஷ்மீர் மக்கள் தேசிய ஒடுக்குமுறையை எதிர்த்துக் கிளர்ச்சியில் ஈடுபட்டு வரும் நிலையில் அதனை தமது சுரண்டலுக்குட்பட்ட பிராந்தியத்துக்குள் கொணரவும், யுத்தத்தின் மூலம் தததம் நாடுகளின் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை நசுக்கவும பிளவுண்டு போயுள்ள இந்திய, பாகிஸ்தானிய முதலாளித்துவ ஆட்சியாளர்கள் முயல்கின்றனர். இலங்கையில் தமிழர் விடுதலைப் போராட்டத்தை நசுக்க முயலும் இலங்கை ஆட்சியாளர்கள் தொழிலாளர்களையும், ஏழைகளையும ஒடுக்க இவர்களுடன் இணைந்துள்ளனர். அதத்தாடு 'அனைததுலக' தலையீட்டின் அடிப்படையில் தீர்வு காணபது பற்றி ஜனாதிபதி பிரேமதாச பேசத் தொடங்கினார். இதன் மூலம் இலங்கையல் முதலாளித்துவ வர்க்க ஆட்சியை கொண்டு நடாத்தும் பொருட்டு ஏகாதிபத்திய நாடுகளில் இருந்து இராணுவ உதவியை பெற்றுக் கொள்ள தமது தயார் நிலையை ஆட்சியாளர்கள் காட்டிக் கொண்டுள்ளனர்.

இவை அனைத்தும் இப்பிராந்தியத்தின் தொழிலாள வர்க்கம், கோடானுகோடி கிராமிய ஏழைகளையும், ஒடுக்கப்படும் தேசிய இனங்களையும் தம்மைச் சூழ அணிதிரட்டி, ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆளும் வர்க்கங்களையும் அரச அமைப்புகளையும் தூக்கி வீசுவதன் இந்தியத் துணைக் கண்டத்தில் சோசலிச குடியரசு ஒன்றியத்தனை நிறுவ முன் செல்வதே இன்றுள்ள ஒரே மார்க்கம் என்பதைச் ஊர்ஜிதம் செய்துள்ளன. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் இந்திய சோசலிச தொழிலாளர் கழகமும் இந்த வேலைத் திட்டத்தின் அடிப்படையிலேயே போராடி வருகின்றன. இந்த முன்நோக்கினை நிலைநாட்டுவதும் இலங்கை — தமிழ் ஈழம் சோசலிச குடியரசினை கட்டி எழுப்ப புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் முன்வைக்கும் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் சிங்கள — தமிழ் தொழிலாளர்களையும் ஏனைய ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்டி போராட்டத்துக்கு கிளர்ந்து எழுவதும் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையேயான பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

இந்தத் தீர்க்கமான அரசியல் நிலையில் இன்றைய யுத்தத் தயாரிப்புக்களுக்கு பிரேமதாச அரசாங்கத்துக்கு அவகாசம் வழங்கிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதலாளித்துவ தலைவர்களின் சமரச வேலைத்திட்டம் யுத்தத்தின் மத்தியில் மீண்டும் வெளிப்பாடாகி உள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) ஜூலை 4ம் திகதி லண்டனில் வெளியிட்ட அறிக்கையல் இந்திய முதலாளிகளின் காலடியில் சாஷ்டாங்கமாகவீழ்ந்து கூறியுள்ளதாவது; ''இந்தியா, இப்பிராந்தியத்தில் சமாதான கர்த்தா பாத்திரத்தினை வகிப்பதோடு, எமது பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான தீர்வுகாண எமக்கு உதவ வேண்டும்''. எனக் கூறிய கிட்டு, 1987 இந்திய இராணுவ ஆக்கிரமிப்பினை ''ஒரு முடிந்துபோன கெட்ட கனவாக ' மறந்து போவோம் எனவும் குறிப்பிட்டுள்ளார். சிங்கள முதலாளிகளுடனான சமரசத்துக்கு சமிக்கை காட்டும் விதத்தில அவர் ''சிங்கள அரசாங்கம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய அரசியல் அங்கீகாரத்துடன் கூடிய அரச சுயாதிக்க திட்டத்தினை சமர்ப்பிக்குமானல்அதை ஆய்வு செய்ய நாம் தயார்'' என்றுள்ளார்.

கிராமப்புற ஏழை இளைஞர்களை இலட்சக் கணக்கல் கொன்றும, தொடர்ந்து ஒடுக்கு முறைகளினை மேற கொண்டு வருவதன் மூலமும் கிராமப்புற ஏழைகளின் எந்தவொரு பிரச்சினையையும் தீர்த்து வைக்க தமக்கு வல்லமை கிடையாது என்பதை இலங்கை முதலாளி வர்க்கம் காட்டியது. 1987ல் இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கு அழைப்பு விடுத்தமையும் இன்றைய யுத்தமும் தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைகள உத்தரவாதம் செய்ய எந்தவித யோக்கிய தாம்சமும் இந்த ஆளும் வர்கத்துக்கு கிடையாது என்பது நிரூபணம் ஆகியுள்ளது நிலைமை இவ்வளம் இருக்கையில் விடுதலைப் புலிகள் தலைமை ''சுயநிர்ணய உரிமையை ஏற்கும் திட்டத்தினை'' பிரேமதாச அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்த்தது தற்செயலானதல்ல, தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையின் முழு வேலைத்திட்டமும் — சகல தேசியவாத இயக்கங்களதும் முதலாளித்துவ தலைவர்களதும் வேலைத்திட்டம் போன்று—தொழிலாளர் ஏழை விவசாயிகளைக் கொண்டும் தமது நலன்களை கட்டிக்கொள் ளும் புறநிலை நிலைமைகளி லேயே தீர்மானிக்கப்படுகின்றது.

இந்தப் பிற்போக்கு சமரசங்கள் தமிழ் மக்களை அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்குவதோடு முதலாளித்துவ வர்க்கத்தின் நாசகரமான தாக்குதல்களுக்கு மீண்டும் பலியாக்கும். தென் ஆபிரிக்காவில் இனவெறி ஆட்சியாளர்களுடன் கைகோர்த்துஅதற்குஎதிரான தமதுகாரியாளர்களை கரைத்துவிடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நெல்சன் மண்டேலா இஸ்ரேல் சியோனிச அரசின் ஆதிக்கத்தினை அங்கீகரித்த யசீர் அரபாத் போன்றவர்களின் பயணத்திசையே வே. பிரபாகரனதும் பயணத்திசையுமாகும்.

தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் முன்னுல் உள்ள ஒரே வேலைத்திட்டம், தமிழ், சிங்களம் பேசும் தொழிலாள வர்க்கத்தின் ஒன்றிணைந்த போராட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட வேலைத்திட்டமாகும். விடுதலைப் புலிகளின் முதலாளித்துவ தலைவர்களால் சுயநிர்ணய உரிமைக்காக ஒரு உறுதியான போராட்டத்தினை நடாத்த முடியாததைப் போலவே அவர்கள் அதனை முதலாளித்துவ தேவைகளுக்காக காட்டிக் கொடுக்கவும் செய்கின்றனர்.

இன்று இனவாத யுத்தத்தின் பங்காளிகளாக தொழிற்பட்டு வரும் சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ தலைவர்கள், சிங்கள—தமிழ் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களை நசுக்கி இராணுவ பாசிச சர்வாதிகாரத்தினை திணிக்கும் முதலாளித்துவ மூலோபாயத்துக்கு சேவகம் செய்து வருகின்றனர். இத்தலைவர்கள் ஏகாதிபத்தியவாதிகளினுல்சதி மூலம் திணிக்கப்பட்ட வம்பு அரசு அமைப்புக்கு எவ்வளவு தூரம் கட்டுப்பட்டுள்ளனர் என்பது 'பூகோள தொடர்ச்சியை'' காக்கும் பேரில் அதன் எல்லைகளை காவல் செய்யும் படையாட்களாக மாறியுள்ளதன் மூலம் வெளிப்படையாகி உள்ளது.

நவசமசமாஜ மத்தியவாதிகள் யுத்தத்துக்கு ஆதரவு வழங்குகையில் பெரும் மோசடியான சூழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ளனர். நவசமசமாஜ தலைவர்களின் 'யுத்தத்தினை எதிர்க்கும்' நிலைப்பாடு, ஜூன் 14ல் பாராளுமன்றத்தில் வெளிப்பாடாகியது. முப்படைகளுக்கும் பொலிசாருக்கும் ஆயுதங்கள் உட்பட்ட அவசியங்களை வழங்கும் பொருட்டு திடுதிப்பென கொணரப்பட்ட 500 கோடி உபரி வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டுக்கு நவசமசமாஜ தலைவர் வாசுதேவ நாணயக்கார வாக்களித்தார், இதன் மூலம் 1914ல் ஏகாதிபத்திய யுத்தத்தில் கெயிசர் அரசாங்கத்தின் யுத்தக் கடனுக்கு ஆதரவாக வாக்களித்து துரோகிகளாக வரலாற்றில் இடம் பெற்ற சமூக ஜனநாயக தலைவர்களின் வரிசையில் வாசுதேவ நாணயக்கார இடம் பிடித்துக் கொண்டுள்ளார்.

இந்த மத்தியவாதிகளின் இரட்டை வேடம் 'எல்.ரீ.ரீ.ஈ யுத்தத்தினையும் எதிர்க்கிறோம். பிரேமதாச அரசாங்கத்தின் யுத்தத்தினை எதிர்க்கின்றோம்'' என்பதன் மூலம் வெளிப்பாடாகியது, 'பிரேமதாச அரசாங்கத்தின் யுத்தத்தினை எதிர்க்கிறோம்; ஆனால் இனவாத யுத்தத்தினை நடாத்தும் பொருட்டு ஆயுதங்கள் வாங்குவதை ஆதரிக்கின்றோம்.' என மேற் சொன்ன மோசடி சூத்திரம் மாற்றப்படவேண்டும். இத்துடன் நின்றுவிடாது யுத்தத்தில் அனாதைகளாகும் படையாட்கள் பொலிசாருக்கு உதவிநிதி வழங்கும் பொருட்டு அகதிகள் உதவிநிதி வாசுதேவ நாணயக்காரவின் பேரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஜூலை 19ல் அறிவிக்கப்பட்டது.

இத்துரோகிகள் ஏனைய சகல பிரச்சினைகளிலும் போலவே இந்த முதலாளித்துவ இனவாத யுத்தத்திலும் முதலாளித்துவ வர்க்கத்தின் நிலைப்பாடு தொழிலாள வர்க்கத்தின் நிலைப்பாடாக்கப்படவேண்டும் எனக் கூறி வருகின்றனர்.

தொழிலாள வர்க்கம் தம்மைக் காட்டிக் கொடுக்க இத்துரோகத் தலைவர்கள் முன்வைக்கும் நிலைப்பாட்டினைத் தோற்கடிக்க வேண்டும்.

● சிங்கள முதலாளி வர்க்கத்தின் யுத்தத்துக்கும் பிராந்திய முதலாளிகள் அதற்கு வழங்கும் பிற்போக்கு ஆதரவுக்கும் எதிராக இலங்கை, தமிழ் ஈழம் இந்தியா, பிராந்தியத்தின் ஏனைய நாடுகளின் தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியத்துக்கு அழைப்பு விடு! அனைத்துலக தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியத்தினை உறுதி செய்!

தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒரு சதமும் வழங்காதே! இனவாத யுத்தத்துக்கு ஒரு ஆளோ அல்லது ஒரு கருவியோ வழங்காதே!

● வட — கிழ் மாகாணங்களில் இருந்து இராணுவத்தை வெளியேற்று! தமிழ் விடுதலைப் போராட்டத்தில் கைவைக்காதே!

● முதலாளித்துவ அரச படைகளை கலைத்து விடு! இனவாத யுத்தத்துக்கும் தொழிலாள வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக ஏகாதிபத்திய வங்கியாளர்களின் கட்டளையின் பேரில் தொடுக்கப்படும் தாக்குதல்களுக்கு எதிராக பொது வேலை நிறுத்தத்துக்கு தயார் செய்ய தொழிலாள வர்க்க அமைப்புக்களை அணிதிரட்டப் போராடு!

● சோவியத் சபைகளையும் பாதுகாப்பு அணிகளையும் கட்டி எழுப்பு! கிராமிய ஏழைகளையும், ஒடுக்கப்படும் மக்களையும் சோவியத் சபைகளில் அணிதிரட்ட நடவடிக்கை எடு!

● யூ. என். பி. அரசாங்கத்தை வெளியேற்று! இலங்கை—தமிழ்ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்துக்காகப் போராடு!

இந்த வேலைத்திட்டத்தின் அடிப்படையில்தமதுபோராட்டங்களை அணிதிரட்டுமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாள வர்க்கத்தினை வேண்டுகின்றது, இந்தக் கொடிய யுத்தத்தில் தொழிலாள வர்க்கம் உலக வங்கியினதும் யூ. என். பி. அரசாங்கத்தினதும் நிச தொடர்பினை புரிந்து கொண்டு, முதலாளித்துவ வர்க்க ஆட்சியை தூக்கி வீச முன்னணிக்குச் செய்வதை தவிர்க்கும் துரோகத் தலைவர்களின் முயற்சியை தோற்கடிக்க வேண்டும். பாதுகாப்பு நிதி தொடர்பாக தொழிலாள வர்க்கத்தின் நனவான் பகுதியினரின் எதிர்ப்பின் அடிப்படையில் மத்தியவங்கி ஊழியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், இன்ஜினியரில் தொழிலாளர் சங்கத்தின் ரவிபுமுகசினை இதனை ஏற்கனவே அறிவித்துள்ளன. கிராமப்புற ஏழைகளின் இரத்தக் களரியில் ஈடுபட்டு வந்த அரசாங்கம் இன்று தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக நடாத்தி வரும் யுத்தத்துக்கு எதிராக தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களின் குரல் ஒலிப்பதை துரோகிகள் தடுத்துள்ளனர். துரோகிகளை தொழிலாளர் இயக்கத்தில் இருந்து அடித்துதுரத்தி, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கை கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை புரட்சித் தலைமையாக உதவி செய்யவும் புரட்சிகர பணிக்கு தோள் கொடுக்கவும் சிங்கள—தமிழ் தொழிலாளர்கள் ஐக்கியப்படுவது முதன்மையும், முக்கியமும் வாய்ந்தது.

படிப்பகம்

Printed in Germany ... Nordstr. 71, D - 4300 Essen 1, West-Germany